# தீபகச் சுடர்

TO SHARE THE LIGHT

ஜனவரி 2025

தீபம் 13 சுடர் 08

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## நம்பிக்கையின் வழிகாட்டி அன்னை மரியா!

# தீபகத்திலிருந்து இறையாசீர்



**அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,**

**கடவுளின் தாய் அன்னை மரியாள் நம் நாட்டிற்கான நம்பிக்கை:** புதிய ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இவ்வேளையில், ஜனவரி 1ஆம் தேதி கத்தோலிக்க திருஅவையில் ஒரு முக்கிய திருநாளாக கொண்டாடப்படுகிறது. கடவுளின் தாய் அன்னை மரியாளின் பெருவிழா, மனிதகுலத்திற்கான தாய்மையின் அன்பையும், நம்பிக்கையையும் நமக்கு நினைவூட்டும் இத்தினம், நம்முடைய இதயங்களை நம்பிக்கையால் நிரப்பி அமைதியும், அன்பும் நிறைந்த வாழ்விற்கு அர்ப்பணிக்க அழைக்கிறது. 2025 ஆம் ஆண்டுக்கான ஜூபிலி வருடத்திற்காக திருத்தந்தை புனிதப் பிரான்சிஸ் வழங்கிய அழைப்பை முன்வைத்து, நாம் இந்த ஆண்டில் நம்பிக்கையுடன் நம்முடைய பயணத்தைத் தொடர வேண்டும்.

**நம்பிக்கையின் வழிகாட்டி நம் அன்னை மரியாள்:** கடவுளின் தாய் அன்னை மரியாள், அனைவருக்கும் நம்பிக்கையின் ஒளிவிளக்கு. கடவுளுடைய வாக்குறுதிகளில் திடமான நம்பிக்கையுடன், மீட்பின் வரலாற்றில் அவரின் கீழ்ப்படிதல், தாழ்ச்சி மற்றும் கடவுளின்மேல் வைத்த நம்பிக்கை, நாமும் அவரைப்போன்று வாழ்வின் குழப்பங்கள் மற்றும் சவால்களுக்கிடையில் நம்பிக்கையுடன் வாழ வழிவகுக்கிறது. 58வது உலக அமைதித் தினத்திற்கான செய்தியில் திருத்தந்தை புனிதப் பிரான்சிஸ், மன்னிப்பு மற்றும் நம்பிக்கை, அமைதியான உலகத்தை உருவாக்குவதற்கு மிக முக்கியம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறார். கடவுளின் தாய் அன்னை மரியாள் தன் வாழ்வின் சவால்களை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டது போல, நாமும் ஒருவரையொருவர் அன்புச்செய்து மன்னித்து, நம்பிக்கையுடன் வாழ அழைக்கப்படுகிறோம். நம் தாய் நாட்டில், சமூக சமநிலையின்மை மற்றும் பொருளாதார சவால்கள் தொடர்ந்து நிலவுகின்ற நிலையிலும், அன்னை மரியாளின் முன்னுதாரணம் நம்மை இறைவனின் அன்பின் கருவிகளாக மாற்றும். அன்பும் கருணையும் நிறைந்த சிறிய செயல்களே, மனித வாழ்வை மாற்றக்கூடிய ஆற்றல் கொண்டவை என்பதை திருத்தந்தை நமக்கு கற்பிக்கிறார்.

**நம்பிக்கையின் ஜூபிலி:** நம்பிக்கை ஏமாற்றுவதில்லை (Spes non Confundit) என்ற மையக்கருத்துடன், 2025 ஆம் ஆண்டின் ஜூபிலி வருடம், இளைய தலைமுறையினரை மையமாகக் கொண்டு கொண்டாடப்படுகிறது. நம் நாட்டில் அறிவு, ஆற்றல், மற்றும் திறமையால் நிறைந்த இளைஞர்களுக்கு இது முக்கிய கொண்டாட்டமாகும். நமது மறைக்கல்வித் திட்டங்களில், இளைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து, அவர்களை கிறிஸ்துவின் நம்பிக்கையின் தூதுவர்களாக வளரச் செய்ய வேண்டும்.

**கிறிஸ்தவ நம்பிக்கை அமைதியான உலகத்தை உருவாக்குதல்:** திருத்தந்தை பிரான்சிஸ் கிறிஸ்தவர்களை உயிர்த்தெழுதலின் சாட்சிகளாகவும் அமைதியை கட்டியெழுப்பும் சிற்பிகளாகவும் இருக்கிறோம் என்று அழைக்கிறார். நம் நாட்டில், நமது பங்குகள் மற்றும் கல்வி மையங்களில் பல்வேறு சமூகங்களுக்கு சேவை செய்யும் இந்நேரத்தில், இந்த செய்தி, ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் உருவாக்க நம்மை அழைக்கிறது. ஜூபிலி வருடத்திற்கு தயாராகும் இவ்வேளையில், நமது சொற்கள் மற்றும் செயல்களால் அமைதியின் செய்தியைப் பரப்ப நம்மை நாம் தயார் செய்துக்கொள்ள வேண்டும். சிறிய செயல்கள், ஒரு சிரிப்பு, ஒரு நல்வார்த்தை, ஒரு உதவும் கை. இவையனைத்தும் நம்பிக்கையின் விதைகளாக மாற முடியும் என்று திருத்தந்தை புனிதப் பிரான்சிஸ் இளையோரின் உலகத் தின செய்தியில் நினைவூட்டுகிறார். நமது வீடுகளில், பள்ளிகளில், மற்றும் பங்குகளில் இந்த விதைகளை விதைத்து, அதை வளர்த்து அது சுவைமிகுந்த கனித்தரும் மரங்களாக மாறும் என்று நம்புவோம்.

**ஒரு செயல் அழைப்பு:** கடவுளின் தாய் அன்னை மரியாளின் பெருவிழாவை நாம் கொண்டாடும் இந்நாளில், அவரை நம் வழிகாட்டிய ஏற்றுக்கொள்வோம். அவர் வாழ்ந்த வழியில் நம்பிக்கை மற்றும் அன்பு, ஆகியப் பண்புகளை நம் வாழ்க்கையில் வாழ்ந்துக் காட்டுவோம். 2025ஆம் ஆண்டு விழாக்களின் ஆண்டாக மட்டுமல்லாமல், நம் நாட்டிற்கும், சமூகத்திற்கும் உலகத்திற்கும் நம்பிக்கையும் அன்பும் தரும் ஆண்டாக மாறச் செய்வோம். இந்த புத்தாண்டில், நம்பிக்கையின் குரலாகவும், மன்னிப்பின் கைகளாகவும், அன்பின் இதயமாகவும் நம்முடைய குடும்பங்கள், பங்குகள் மற்றும் சமூகங்களில் செயல்படுவோம். அன்னை மரியாளின் துணையோடு, கிறிஸ்துவின் ஒளியில் நடந்து நம்பிக்கையின் தூதுவர்களாக இறையாட்சியை உலகமெங்கும் கட்டியெழுப்புவோம்.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச

இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிக்காட்டி


| | | |
|---|---|---|
| 01.01.2025 | கன்னி மரியாள் இறைவனின் தாய் பெருவிழா | 02 |
| 05.01.2025 | ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா | 03 |
| 12.01.2025 | ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா | 04 |
| 15.01.2025 | அருளாளர் அலோசியஸ் வரியாரா | 05 |
| 19.01.2025 | பொதுக்காலம் 2ம் ஞாயிறு | 07 |
| 20.01.2025 | புனித செபஸ்தியார் | 08 |
| 22.01.2025 | அருளாளர் லவுரா விகூஞா | 09 |
| 24.01.2025 | தூய பிரான்சிஸ்கு சலேசியார் | 10 |
| 25.01.2025 | திருத்தூதர் புனித பவுலின் மனமாற்றம் | 11 |
| 26.01.2025 | பொதுக்காலம் 3ம் ஞாயிறு மற்றும் இந்திய குடியரசு நாள் | 13 |
| 27.01.2025 | புனித மெர்ஸி ஆஞ்சலா திருவிழா | 14 |
| 28.01.2025 | புனித தாமஸ் அக்குவினாஸ் திருவிழா | 15 |
| 31.01.2025 | புனித ஜான்போஸ்கோ திருவிழா | 16 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர ...


| | |
|---|---|
| புத்தாண்டில் புதிதாய் பிறப்போம் | 17 |
| தேவசகாயம் பிள்ளை மறைசாட்சியான வரலாறு | 20 |
| புனித பிரான்சிஸ்கு சலேசியார்-வாழ்வும் பாடமும் | 24 |
| திருஅவைச் செய்திகள் | 25 |

# பகுதி 1 : வழிபாட்டு வழிக்காட்டி

| 01.01.2025 | கன்னி மரியாள் இறைவனின் தாய் பெருவிழா | திருப்பலி |
| --- | --- | --- |

**முன்னுரை** *திருமதி. டிலைலா சேவியர்*

*எண்: 6: 22-27 கலா. 4: 4-7 லூக். 2: 16-21*

2025ம் ஆண்டு புது விடியலின் வெண்மேகமாய் ஒளிர வருகையில், நாம் உரிய தயாரிப்புடன் புத்தாண்டை வரவேற்போம். கன்னிமரியா இறைவனின் தாய் என மரியாவைப் போற்றியும், இயேசு என்னும் பெயரால் முதன் முதலாக அழைக்கப்பட்ட இறைமகனாம் இயேசுவைப் புகழ்ந்தும், களிப்புறும் நாள் இது. இவ்வாண்டின் துவக்கத்திலே எண்ணாகமத்தில் கூறப்பட்டதுபோன்று, மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு இறையாசீரும், அருளும் பொழியப்படுவதை உணர்கிறோம். இப்படிப்பட்ட அருளும், ஆசீரும், ஆனந்தமும் இன்று மட்டுமிருந்து நாளை மறைந்து விடக்கூடியவை அல்ல. அப்படி மறைந்து விடும்படி நாம் நடந்து கொள்வதும் கூடாது. அன்னை மரியா போன்றே வாழ்வில் இறைவன் நமக்கு அருளும் கொடைகளை, அவர் நமக்கு செய்த நன்மைகளை, அவர் நமக்குக் காட்டும் வழிகளை மறந்துவிடாமல், அவற்றையே வாழ்நாள் முழுவதுமாகக் கடைப்பிடித்து நல்லதொரு வாழ்வை வாழ்ந்திட உறுதி கொள்வோம்.

பிறந்துள்ள 2025ம் ஆண்டானது நமக்கு மட்டுமல்ல, இவ்வுலக மாந்தர் அனைவரது வாழ்விலும் அன்பு, உண்மை, நீதி, சமத்துவத்தைத் தரக்கூடிய ஆண்டாக விளங்கிட நமக்காக என்றும் பரிந்துரைக்க தயாராக இருக்கும் நம் இறைவனின் அன்னையான மரியாவின் மூலமாக இறைமகன் இயேசுவிடம் செபிப்போம். கடந்த ஆண்டு நடைபெற்ற வன்முறைகள், கசப்பான நிகழ்வுகள் பிறந்திருக்கும் புத்தாண்டில் நேராமல் இருக்க இறைவன் துணைபுரிய வேண்டுமென்று மனதார மன்றாடுவோம். இவ்வாண்டு, நாம் வாழும் இப்புவியை கடும் இயற்கை சீற்றங்களினின்று கடவுள் காத்தருளுமாறும், தேவையான பருவ மழையையும் நல்ல விளைச்சலையும் தந்து நம் அனைவரையும் தம் அருளினால் நிரப்புவராக என்று இப்புதிய ஆண்டின் துவக்கத்தில் செபித்தும், நமது புனித வாழ்வுக்குத் தடையாயுள்ள தவறான சிந்தனைகள், கொள்கைகள், மதிப்பீடுகள், அணுகுமுறைகள், உறவுமுறைகள், செயல்பாடுகள் இவற்றை இனங்கண்டு வேரறுத்து ஒதுக்கி, நம் வாழ்வில் அன்பு, அருள், தூய்மை, வாய்மை, நேர்மை, சேவை, தியாகம், அர்ப்பணிப்பு போன்ற நற்பண்புகளால் அலங்கரித்து வாழ்வோம் என உறுதியளித்து, பக்தியோடு இன்றைய திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரையும் கடந்த ஆண்டு முழுவதும் வழிநடத்திய இரக்கத்திற்காக நன்றி கூறுவதோடு இப்புதிய ஆண்டில் இவர்கள் அனைவரும் உமது தூய ஆவியின் வரங்களாலும், இறைவனின் கனிவிரக்கத்தாலும் வழிநடத்தப்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. உலகின் ஒளியாய் உதித்த இறைவா, தாழ்ச்சியே உருவான அன்னை மரியாவைப்போல நாங்களும் எங்களிடமுள்ள தற்பெறுமை, ஆணவம், கோபம் போன்ற குணங்களை தவிர்த்து தாழ்ச்சியும், எளிமையும், தியாகமனம் கொண்டவர்களாக வாழும் வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.
3. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, அன்னை மரியாவின் விழாவினை சிறப்பிக்கும் நாங்கள், அன்னை மரியாவைப் போலவே இறைவனின் திட்டங்களை உணர்ந்தும் நம்மையே முழுமையாக ஒப்புக்கொடுத்தும், இறுதிவரை இறையன்பிலும், அன்னை மரியாவின் பாதுகாப்பிலும் வாழும் வரம்பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பே உருவான இறைவா, நீர் எங்களுக்கு அளித்த இப்புதிய ஆண்டில் இறையன்பிலும், பிறர் அன்பிலும் சிறந்து விளங்கவும், நாங்கள் சந்திக்கும் அனைவரிடத்திலும் குறைகளை காணாமல் நிறைகளையும் நற்பண்புகளையும் உள்வாங்கி அவைகளை கடைபிடிக்கவும், புதிய செயல்கள், எதிர்பார்ப்புகள், திட்டங்கள் அனைத்தும் உமது அளவிலா அன்பில் நிறைவேற வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

| 05.01.2025 | ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திரு.* D.V.R. *ராஜா*

*எசா. 60:1-6 எபே. 3: 2-3, 5-6 மத். 2: 1-12*

குழந்தை இயேசுவில் நம்பிக்கையுள்ள இறைமக்களே, கிறிஸ்து இயேசு பாலனாய் யூதேயாவில் ஞானிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டு அவர்கள் பாலனை கண்டு மகிழ்ந்த நாளைதான் நமது திருஅவை இன்று திருக்காட்சி பெருவிழாவாகக் கொண்டாடுகிறது. முற்காலத்திலே யூதேயாவிலுள்ள பெத்லகேமிலிருந்தே அரசர்களுக்கெல்லாம் அரசரான மெசியா தோன்றுவார் என்று இறைவாக்கினர் எசாயா அறிவித்ததை முதல் வாசகத்தில் காண்கிறோம். இரண்டாம் வாசகத்தில் பிறந்த இயேசு கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல புறவினத்தார்க்கும் உலகமாந்தர் அனைவருக்குமே அவர் மெசியா, என்று அவருக்கு அருளப்பட்ட வெளிப்பாட்டை புனித பவுல் அறிவிக்கிறார். நற்செய்தியில் மூன்று ஞானிகள் பாலன் இயேசுவை கண்டு எல்லையில்லா மகிழ்ச்சியடைந்து, தங்களிடம் அதற்குமேல் மதிப்புமிக்க வேறேதும் இல்லாத, பொன்னையும், வெள்ளை போளமும், சாமிராணியையும் காணிக்கையாக சமர்ப்பித்து நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினர்.

இதில் பொன் அரசருக்கும், வெள்ளைப் போளம் மனிதருக்கும், சாம்பிராணி கடவுளுக்கும் அடையாளமாக கருதப்படுகிறது. இன்றைய திருப்பாடலும் ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்களாக என்றும், இறைவன் ஒரு குறிப்பிட்ட குலத்திற்கு மட்டும் இறைவன் அல்ல அவர் ஜாதி, இனம், மொழி, நாடுகளைக் கடந்துள்ளார். இதனால்தான் கீழ்த்திசை ஞானிகள் வருவதாக வாசிக்கின்றோம். பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளியை நோக்கி பயணித்தனர். எல்லா இனத்தவருக்கும் மீட்பு உண்டு என்பதை அறிவுறுத்துவதே இவ்விழாவின் நோக்கம். எனவே பாலன் மெசியா உலக மீட்பர் என்பதை உணர்ந்து நாமும்

குழந்தை உள்ளத்தோடு இறைவனுக்கு ஏற்புடையவர்களாய் ஜாதி, மதம், ஏழை, பணக்காரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு பார்க்காமல் வாழ்ந்திட இத்திருக்காட்சி நாளில் பாலன் இயேசுவிடம் வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருஅவைக்காக:** அன்பு இறைவா, எமது திருத்தந்தையின் உடல் உள்ள நலனைப் பாதுகாத்து அவர் தம் பணிகளையும், நிர்வாகத்தையும், மேம்படுத்தி, அமைதியின் தூதுவராக என்றும் விளங்கிடவும், மக்களை இறைவனில் இணைக்கும் பாலமாக இணைத்திட அருள்புரியுமாறு பாலன் இயேசு வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.
2. **நாட்டுக்காக:** அன்பு இறைவா, எமது தேசத்தில் மக்கள் அமைதியுடன் வாழ வன்முறைகளை, களைந்து போர்கள் நிறுத்தப்பட்டு, நலிந்தோர் உயர்வு காணவும், ஏழை மக்களின் பொருளாதாரம் உயரவும் பிறந்துள்ள பாலன் இயேசு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. **மக்களுக்காக:** அன்பு தந்தையே இறைவா, எமது மக்கள் மெசியாவின், வழிகளையும் வார்த்தைகளையும் உள்ளத்தில் இருத்தி இறைவனுக்கு ஏற்புடையவர்களாய் வாழவும், நோயிலிருந்தும், கடன் பிரச்சனையிலிருந்தும், பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட்டு நம்பிக்கையில் உறுதியடைந்து வாழ்வில் உம்மில் மகிழ்ந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
4. மீட்பளிக்கும் இறைவா, உமது திருக்காட்சி வழியாக மீட்பு அனைவருக்கும் உரியது என்பதை அறிவுறுத்துகின்றீர். உம்மை ஏற்றுக்கொள்ளாத மக்களின் உள்ளத்தில் உமது அருளைப்பொழிந்து நீரே அவர்களின் மீட்பர் என்பதை உணர்ந்து உம்மில் நம்பிக்கைக் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

| 12.01.2025 | ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. டிலைலா சேவியர்*

*எசா. 42: 1-4, 6-7 தீத்து 2: 11-14, 3: 4-7 லூக். 3: 15-16, 21-22*

இறையேசுவில் பிரியமானவர்களே, கத்தோலிக்க திருஅவை இன்று ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்கு பெருவிழாவினைக் கொண்டாடுகிறது. இன்றைய இறைவார்த்தை வழிபாடும், திருவழிபாடும் நம்மை திருமுழுக்கின் வழியாக புதுவாழ்வு தொடங்க புண்ணிய வாழ்வு வாழ அதன் வழியாய் ஆண்டவரை மகிமைப்படுத்த அழைப்பு விடுக்கிறது. ஆண்டவர் இயேசு அன்று யோர்தான் நதியிலே திருமுழுக்கு யோவனிடம் திருமுழுக்குப் பெற்றார். அப்போது ஆவியானவர் புறாவடிவிலே அவர்மீது இரங்கி வந்தார். வானத்திலிருந்து தந்தையாம் கடவுளின் குரல் கேட்டது. "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்". இயேசு திருமுழுக்குப் பெற்றபோது அவரைத் தன் மகன் என தந்தை கடவுள் வெளிப்படுத்துவதோடு தம் ஆவியைப் பொழிந்து, அவரை உலகின் மீட்பராக அறிமுகம் செய்து வைக்கிறார். இயேசு ஏன் திருமுழுக்கு பெறவேண்டும்? அவசியம் தானா? என்ற கேள்விகளுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. கடவுளுக்கு

ஏற்புடையதை நிறைவேற்றவும், சமுதாயத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஏழைகள், வரிதண்டுவோர், பாவிகள் ஆகியவர்களோடு தமது ஒன்றிணைப்பைக் காட்டவும், உலகின் அனைவரின் பாவத்தை தன்மேல் சுமந்துக்கொண்டு அவற்றிற்குக் கழுவாயாக தன்னை அளிக்கவும், தன் இன்னுயிர் ஈந்து, பின் உயிர்த்து நமக்கு புதுவாழ்வு தந்து தந்தையாம் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற திருமுழுக்குப் பெற்றார்.

**இயேசுவின் திருமுழுக்கு நமக்குத் தரும் செய்திகள்**

ஆண்டவரின் திருமுழுக்கு நம்முடைய திருமுழுக்கை நினைவுப்படுத்த வேண்டும், ஒளியாக இருக்க வேண்டும், அனைவருக்கும் சாட்சியாக இருக்க வேண்டும், தூய்மையான வாழ்வு வாழ வேண்டும். நாம் அனைவரும் திருஅவையின் ஒரே குடும்பம் என்ற உணர்வு வரவேண்டும். அனைவருக்கும் சாட்சியாக இருக்க வேண்டும். நாம் அனைவரும் இறைவனின் சாயலாக இருப்பதால் ஒருவரையொருவர் அன்பு செய்து வாழ வேண்டும் என்பதையெல்லாம் இன்றைக்கு நினைவில் கொண்டு வருவோம். அப்போது ஆண்டவர் இயேசு தாழ்ச்சியோடு திருமுழுக்குப் பெற்றது, தன்னுடைய பணிவாழ்வை தொடங்கியது, நம்முடைய சீடத்து வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்வோம். நாமும் நம் வாழ்வில் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி இறையரசின் மதிப்பீடுகளை அன்பு, நீதி, உண்மை, சமத்துவம் ஆகியவை மண்ணில் மலரச் செய்து தந்தை கடவுளை மகிழ்விக்கச் செய்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் மறைப்பரப்பு பணியாளர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, உடல்உள்ள நலன்களுடன் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற வேண்டிய அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய்மையே உருவான இறைவா, ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்கு விழாவினைக் கொண்டாடும் இந்நாளில் திருமுழுக்கின்போது நாங்கள் பெற்றுக்கொண்ட தூய அருளடையாளங்களின்படி பிறருக்கு ஒளியாகவும், தூய்மையான சாட்சியவாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, திருமுழுக்கின்போது தூய ஆவியைப் பெற்ற நாங்கள் கிறிஸ்துவில் புதுப்படைப்பாக தினமும் மாறிட தூய ஆவியானவர் தொடர்ந்து நம்மில் செயல்பட வேண்டிய அருளைத் தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, திருமுழுக்கு பெற்றவுடன் இயேசு செபத்தில் ஈடுபட்டு தன் வாழ்வின் இறுதிவரை எல்லா செயல்களுக்குமுன் தந்தையை நோக்கி செபிப்பதுபோல நாங்களும் எங்களின் எல்லா நிலைகளிலும் செபிக்கும் மனநிலையும் ஆர்வமும் என்றும் எங்களில் நிலைத்திடவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

| 15.01.2025 | அருளாளர் அலோசியஸ் வரியாரா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திரு. அருள் ஜெயராஜ்*

*எண்: 6: 22-27 கலா. 4: 4-7 லூக். 2: 16-21*

இயேசுவில் பிரியமுள்ளவர்களே, அலோசியஸ் வரியரா, 1875-ம் ஆண்டு சனவரி 15-ம் நாள் வட இத்தாலியில், தூரின் அருகில் வயரிகி என்ற இடத்தில், பியட்ரோ வரியாரா, லவியா புஸ்ஸா என்னும் தம்பதியர்களுக்கு மகனாகப் பிறந்தார். 1887-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் நாள் பள்ளிப் படிப்பிற்காக இத்தாலியில் வல்தோக்கோவிற்குச் சென்றார். 1891-ம் ஆண்டு ஆகஸ்டு 17-ம் நாள் சலேசிய சபையில் சேர்ந்தார். 1894-ம் ஆண்டு அருட்தந்தை உனியாவுடன் தொழுநோயாளர் பணியில் ஈடுபட கொலம்பியா சென்றார். நடிப்புத் திறனிலும், இசைத்திறனிலும் கைத்தேர்ந்த இவர் தொழுநோயாளர்களை மகிழ்விக்க இத்திறமைகளைப் பயன்படுத்தி அன்போடு பணியாற்றினார். இவர் 1898- ம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார். தொழுநோயாளரின் நலனுக்காக அவர்களிடமிருந்தே சில பெண்களை ஒருங்கிணைத்து, ஒரு பக்த சபையை உருவாக்கினார். அவர்களை "இயேசு மரியின் திருஇதயங்களின் புதல்வியர்" என்று அழைத்தார். குழந்தைகளையும், சிறுமிகளையும் இச்சகோதரிகள் கவனித்துக் கொண்டனர். தொழுநோய் இவரைத் தொற்றிக் கொண்டபோது "எல்லாம் இறைவனிடமிருந்தே வருகின்றன; எல்லாம் இறைவனிடமே செல்கின்றன," என்று பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு, தொழுநோயாளிகளுக்கு தந்தையாக, தாயாக, அன்பராக, ஆதரவாக வாழ்ந்த இவர் 1923-ம் ஆண்டு பிப்ரவரி 1-ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவருக்கு 2002-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் நாள் அருளாளர் பட்டம் வழங்கினார். இவரைப்போல் நாமும், நமது திறமைகளை பிறருக்கு கொடுத்து அவர்களை மகிழ்விக்க வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்**

1. அனைத்துலகை காத்து வரும் எம் இறைவா, எம் திருச்சபையை வழிநடத்தும் ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் இறையேசுவின் பாதச்சுவடுகளைப் பின்பற்றி தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை காத்து வழிநடத்தத் தேவையான அருளைத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் தந்தையே, "பிறரன்பு பணியே இறைப்பணி" என வாழ்ந்த அருளாளர் வரியராவைப்போல் நாங்கள் ஏழைகள், ஆதரவற்றோர், தொழுநோயாளர்கள் நல்வாழ்விற்காக உழைக்க தேவையான உடல், உள்ள நலனைத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு இறைவா, "நான்" என்ற சுயநலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் எம் நாட்டுத் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். அவர்கள் தங்களிடம் ஒப்படைத்த மக்களை பாதுகாத்து வழிநடத்தவும், அவர்களின் தேவைகளைப் பூர்த்திச்செய்து "நான்" என்ற சுயநலத்தை கலைந்து "நாம்" என்ற எண்ணத்தோடு மக்களோடு இணைந்து வாழும் மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 19.01.2025 | பொதுக்காலம் 2ம் ஞாயிறு | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. ராணிவில்சன்*

*எசா: 62: 1-5 1 கொரி: 12, 4-11 யோவா: 2: 1-11*

இறையேசுவின் பிரியமுள்ள இறைச்சமூகமே, பாலன் இயேசுவை பலவித நிலைகளில் (உள்ளம், இல்லம், ஆலயம் என) அழகுப்படுத்தி வரவேற்று மகிழ்ந்தோம். ஆண்டு தொடக்க நாளை அன்னை மரியின் திருநாளாகவும் அவரது துணை வேண்டியும் கடந்த ஆண்டு முழுவதும் காத்த அனைத்துச் செயல்களுக்கும் நன்றிக்கூறி சிறப்பாக கொண்டாடினோம். இப்படி இத்தனை வழிகளில் தூய ஆவியின் துணையோடு இறைமாட்சிமை வெளிப்பட அன்னையின் பரிந்துரை பெற, பயணிக்க, செயல்பட பலவற்றை மேற்கொள்ள வேண்டும். அதனையே இன்றைய திருநூலில் உள்ள இறை முத்துக்களின் சிறப்பு பதிவு, நம்மை தியானித்து செயல்பட அழைக்கிறது. முதலில் நம்மிடம், குடும்பத்தில், சமூகத்தில், திருஅவையில் என்னென்ன குறைகள், தொய்வுகள் உள்ளன என ஆய்வுகள் செய்ய வேண்டும். பின்பு இறையேசுவையும், அன்னையையும் உளமார்ந்த நம்பிக்கையோடு, அன்போடு அழைக்க வேண்டும்.

நாம் பெற்றக் கொடைகளை நம் அருகிலுள்ளவர்களோடு பகிர்ந்து அவர்களையும் இறைவனோடு ஒன்றிணைக்க வேண்டும். அவர்களின் வாழ்வில் இறை நம்பிக்கையை வளர்த்து இறைவனுக்கேற்ற மக்களாக வாழ அவர்களை ஊக்கப்படுத்தி, திடப்படுத்த வேண்டும். இறையருள் அவர்களில் முழுமையாக நிரம்பி வழியும் அளவிற்கு செய்து குறைகளை நிறைவாக்க வேண்டும். இறைக் கொடைகள், தொண்டுகள், செயல்பாடுகள் பலவகையுண்டு. ஆனால் ஒரே இறைத் திட்டம், ஒரே குறிக்கோள், ஒரே இலக்கு நோக்கி பயணிக்க வேண்டும். சங்கடங்கள், பிரச்சனைகள், சவால்கள், எதிர்ப்புகள், சோர்வுகள் வந்தாலும் துணிவோடு மேற்கொண்டு செயல்பட இறைவன் நம்மோடிருந்து செயலாற்றுவார், என்ற ஆழ்ந்த நம்பிக்கையை மனதில் கொண்டு நாம் செயல்பட்டு வாழ்ந்தால், வாழ்வில் இனிமையும் சுவையும் கொண்டவர்களாக மாற இயலும் என்பதனை அறிந்து, செயல்பட இன்றையத் திருப்பலியில் பக்தியோடு இறையாசிர் பெற செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையில் உம்மால் அழைக்கப்பட்ட அனைத்து பணியாளர்களும் தலைமை பணியாளருக்கு கீழ்ப்படிந்து அவர்களின் அழைப்பிற்கு ஏற்ப சிறப்பாக செயல்பட உம் தூய ஆவியாரின் அருட்கொடைகளைப் பொழிந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. எங்கள் குறைகளை நிறைவாக்க வந்தவரே, நாங்கள் என்றும் இறை மக்களாக திகழ வேண்டும் எக் கொடைகளை பெற்றோமோ அதற்கேற்ப தொண்டுகள் புரிந்து எக்குறையுமின்றி நிறைவாக்கக் கூடிய மனநிலையை அளித்து, உம் நம்பிக்கையில் உறுதிக்கொண்டவர்களாக செயலாற்ற போதுமான அருள வரங்களை பொழிந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. முழுமையின் நாயகரே எம் இறைவா, புயலாலும், பெரு வெள்ளத்தினாலும் வீடுகள், மக்கள், விவசாய நிலங்கள், பயிர்கள் பாதிக்கப்பட்டு பெரும் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. அரசும் அரசியல்வாதிகளும் தாயுள்ளத்தோடு அனைவருக்கும் அனைத்திற்கும் முழு நிவாரணம் வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட தேவையான வழிமுறைகளை வழங்கும் தாராள உள்ளத்தை தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. மூவொரு இறைவா, நீங்கள் எப்படி இணைந்து செயல்படுகிறீர்களோ அவ்வாறே, இன்றைய இறை வார்த்தைகள் இருந்தன. இயேசுவும் அன்னைமரியாளும், பந்தி மேற்பார்வையாளர், பணியாளர்கள் இணைந்து செயல்பட்டு திருமண உபசரிப்பில் எவ்வாறு மகிழ்ந்தார்களோ அதுபோல ஒவ்வொரு மனிதமும் மாறி இந்த உலகை அன்பு, அமைதி, நீதி, சமாதானம், சமத்துவம் போன்ற வழிகளில் பயணித்து ஒற்றுமையோடு வாழும் உள்ளத்தைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

| 20.01.2025 | புனித செபஸ்தியார் | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திரு. P. விக்டர்*

அன்பார்ந்தவர்களே, ஒவ்வொரு ஆண்டும் சனவரி 20ஆம் நாள் புனித செபஸ்தியாரின் நினைவைப் போற்றும் வகையில் சிறப்பித்து வருகின்றோம். புனித செபஸ்தியார் கி.பி. 256ஆம் ஆண்டு உரோமை நகரில் பிறந்தார். நாட்டுக்காக சேவை செய்ய விரும்பி உரோமை நாட்டின் இராணுவத்தில் இணைந்து பணிபுரிய ஆரம்பித்தார். இந்நிலையில் இயேசுவின் போதனை அறிந்து திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவராக மாறி, தான் கிறிஸ்தவராக மாறியது மட்டுமன்றி தன்னோடு பணிபுரியும் சகதோழர்களையும் கிறிஸ்தவர்களாக மாற்றினார். புனித செபஸ்தியாரின் செயல்களால் கோபமுற்ற பேரரசன் மரத்தில் கட்டிவைத்து அம்புகள் எய்து அவரைக் கொலை செய்யும்படி ஆணையிட்டான். அரசனின் ஆணைப்படி புனித செபஸ்தியாரை ஓர் மரத்தில் கட்டிவைத்து அம்புகள் எய்கின்றனர். அவர் இறந்து விடுவார் என்று எண்ணி அவரை அப்படியே விட்டு விட்டு சென்றனர். ஆனால் அந்த வழியாக வந்த ஐரீன் என்ற சகோதரி புனித செபஸ்தியாரின் உடலில் உயிர் இருப்பதை கண்டு அவரைத் தனது இல்லத்தில் வைத்து காப்பாற்றுகிறார்.

முழுமையாக நலமடைந்த புனித செபஸ்தியார் மறுபடியும் அரசனை சந்தித்து கிறிஸ்தவர்களுக்கு எதிராக செய்து வரும் கொடுமைகளை கண்டிக்கிறார். மன்னன் அவரது கண்டித்தலைக் கண்டு கடுங்கோபமுற்று கொடுந்தடிகளால் மறிக்கும் வரை அவரை அடித்து கொலை செய்கின்றான். புனித செபஸ்தியார் கி.பி. 288ஆம் ஆண்டு மறைசாட்சியாக உயிர் நீத்தார். இந்நன்னாளில் புனித செபஸ்தியாரின் வீரத்தை நாமும் பெற்று திருஅவையின் வளர்ச்சிக்காக பணிபுரியும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இருப்பிடமே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட

2. எங்களை அதிகமாக அன்பு செய்யும் ஆண்டவரே, இன்று நாங்கள் விழா கொண்டாடும் புனித செபஸ்தியாரின் கிறிஸ்தவ வாழ்வும் அவரது வீரம் செரிந்த மறைசாட்சியாக உயிர் நீத்த தியாகமும் எங்கள் வாழ்வில் அர்ப்பண வாழ்வையும் ஆண்டவர் இயேசுவுக்காக நற்பணிகள் பல செய்ய வேண்டும் என்கிற உணர்வையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
3. எங்களுக்காக யாவையும் செய்து முடிக்கும் ஆண்டவரே, பணமிருந்தும், பொருள் இருந்தும், அதிகாரம் இருந்தும், புகழ் இருந்தும், அவற்றையெல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாமல் ஆத்தும தாகத்தோடு மறைப்பரப்பு பணிசெய்து இரத்த சாட்சியாக மரித்த தூய செபஸ்தியாரைப் போல நாங்களும் நற்செய்தி அறிவிப்பு பணியை துணிவுடன் செய்ய வரம் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.
4. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, தூய செபஸ்தியாரின் திருவிழாவை கொண்டாடும் நாங்கள் உண்மைக்கு சாட்சியாக, தீமைகளை எதிர்த்து நிற்க திறன் கொண்டவர்களாக, துன்பங்களை ஏற்கும் துணிவு கொண்டவர்களாக, பரிசுத்த ஆவியாரின் துணையோடு உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

| 22.01.2025 | அருளாளர் லவுரா விகூஞா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *சலேசிய புனிதர் திருப்பலி புத்தகம்*

லவுரா கார்மென் விகூஞா, சிலே நாட்டிலுள்ள சந்தியாகோ என்னுமிடத்தில் 1891ம் ஆண்டு பிறந்தார். லவுராவின் தாய் தன் இரு பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்காக சொந்த ஊரை விட்டு அர்ஜென்டினாவிற்கு குழந்தைகளுடன் சென்றார். 1900ம் ஆண்டில் சிறுமி லவுரா சலேசிய சபை கன்னியர்களால் நடத்தப்படும் பள்ளியில் சேர்ந்தாள். அதே ஆண்டில் முதல் முறையாக இயேசுவை தன் இதயத்தில் பெற்றபொழுது தூய தோமினிக் சாவியோவைப்போல் "இறைவனை என் முழு உள்ளத்தோடு அன்பு செய்வேன், ஒறுத்தல் முயற்சிகளைச் செய்வேன், கடவுளுக்கு எதிராக தீமை செய்வதைவிட சாவேன், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனங்களைப்பெற்று தேவ நற்கருணை உட்கொள்வேன்", என்னும் தீர்மானங்களை எடுத்துக்கொண்டாள். தன் தாய் நெறிதவறிச் செல்கிறார் என்பதை அறிந்த லவுரா, தன் தாயின் மனமாற்றத்திற்காக தன்னையே இறைவனுக்கு அர்ப்பணித்தாள். தன் ஆன்ம குருவின் ஆலோசனைப்படி தான் செய்த ஒறுத்தல் முயற்சிகளை அதிகரித்தாள். இதனால் அவள் உடல் வலுவிழந்தது. இறப்பதற்கு முந்திய நாள் தன் தாயை நோக்கி, "அம்மா உங்களை மீண்டும் கடவுளிடம் சேர்க்க விரும்பி என்னையே இயேசுவுக்கு அர்ப்பணித்து விட்டேன். நான் இறப்பதற்கு முன் நீங்கள் கடவுளோடு இணைந்து விட்டீர்கள் என்னும் மகிழ்ச்சியை எனக்குத் தாருங்கள்" என்றாள். 1904ம் ஆண்டு சனவரி 22ம் நாள் தன் தாய் மனம் மாறிய மகிழ்ச்சியோடு லவுரா உயிர் நீத்தாள். அர்ஜென்டினாவில், பாஹியா பிலாங்கா என்னுமிடத்தில் உள்ள சகாய அன்னையின் புதல்வியர் சபை சிற்றாலயத்தில் லவுராவின் உடல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அருளாளர் லவுராவின் தூய விசுவாசத்தையும் விடா முயற்சியையும் நாமும் பெற்றுக்கொள்ள இறைவனிடம் இறைஞ்சுவோம், இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் தங்களது மறைப்பரப்புப் பணியிலே இளைஞர், இளம் பெண்களுக்கு கிறிஸ்துவ நம்பிக்கை, மகிழ்ச்சி, பிறரன்பு, சேவை, அறநெறி வாழ்வு ஆகியவற்றின் சிறந்த மதிப்பீடுகளை எடுத்துரைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியரும், சலேசிய குடும்பத்தினரும் புனித தோமினிக் சாவியோ, அருளாளர் லவுரா விகூஞா இவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி தங்களின் தனி அழைப்பிற்கேற்ப உண்மையுள்ளவர்களாய் வாழ்ந்து புனிதத்தின் புதிய மாதிரிகளை திருச்சபையில் உருவாக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இளைஞர் இளம்பெண்கள் இறைவார்த்தையின் வலிமையினால் கிறிஸ்துவின் உயிர்தரும் பிரசன்னத்தில் நிலைத்திருந்து, தங்களையே சமுதாயத்திற்கு அர்ப்பணிப்பதன் மூலம் சுதந்திரம், நீதி, அமைதி, ஆகியவற்றைப் பெற்று அனுபவிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. இங்கு கூடியுள்ள நாங்கள் புனிதமானதும் நற்கனி தருவதும் தியாகமானதுமாகிய திருத்துது வாழ்வை வாழ அழைக்கின்ற இறைத்தந்தையின் திருவுளத்திற்கேற்ப உண்மையுள்ளவர்களாக வாழ, இந்த நற்கருணைப் பகிர்வு வலிமையூட்ட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

| 24.01.2025 | தூய பிரான்சிஸ்கு சலேசியார் | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திருமதி. ராணி சம்பந்தன்*

இறையேசுவின் பிரியமான இறைமக்களே, இன்றைய தினம் நாம் தூய பிரான்சிஸ் சலேசியாரின் திருநாளைச் சிறப்பிக்க அழைக்கப்பட்டுள்ளோம். தூய பிரான்சிஸ் சலேசியார், பிரான்சிஸ் டி பாய்சி, பிரான் காய்ஸ் டி சாயனஸ் என்ற பெற்றோருக்கு பிரான்ஸ் நாட்டிலுள்ள தியோரென்ஸ் என்ற ஊரில் கி.பி. 1567ல் ஆகஸ்ட் 21ம் தேதியன்று பிறந்தார். குருப்பட்டம் பெற்று கி.பி. 1602 டிசம்பர் 8ந்தேதி ஜெனிவாவின் ஆயராக நியமனம் பெற்றார். மேன்மையான புனிதர் பத்திரிக்கையாளரின் புரவலர், நல்லொழுக்கத்தின் மாதிரி என்ற பல பட்டங்களுக்குரியவர். எல்லாவற்றுக்கும் மூலக்காரணமாக கடவுளின் அன்பை முக்கியமாக கருதியவர், பல சபைகளை உருவாக்கியவர். பதுவாவில் டாக்டரேட் பட்டம் பெற்றவர். பலரை மனந்திருப்பி, இறைவனிடம் சரியான முறையில் அன்பை செலுத்துவது எப்படி என்பதை விளக்கும் 12 புத்தகங்களை எழுதி புகழ் பெற்றவர். இறைவனோடு நெருக்கமான அன்பை வளர்த்துக்கொள்வது எப்படி என்றும், பிறர் மனதைத் தொடும்படியாகவும் தன் புத்தகங்களில் எழுதியுள்ளார். வாழ்க்கையின் மாற்றங்கள் குறித்து பயப்படுதல் தவறு, ஏனெனில் இறைவன் ஒவ்வொருவரையும் தன் கரங்களில் பொறித்துள்ளார் என்றும் உறுதியாக கூறியுள்ளார். இவரின் அரிய சேவையை பாராட்டி திருத்தந்தை 9ம் பத்திநாதர் இவருக்கு "டாக்டர் ஆப் சர்ச்ஸ்" என்ற கௌரப்பட்டத்தையும் கொடுத்துள்ளார். பின் கி.பி. 1622 டிசம்பர் 28ந்தேதி இறைவனடி சேர்ந்தார். இதற்கு பிறகு கி.பி. 1665ல் திருத்தந்தை 7ம்

அலெக்சாண்டர் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். இவரைப் பின்பற்றி நம்மையும் இறைவனிடம் நெருக்கமாய் இணைத்துக்கொள்ளும் மனப்பக்குவத்தையும், ஒருவரையொருவர் அன்பு செய்யும் ஞானமும் பெற இத்திருப்பலியில் பக்தியுடன் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நற்செய்தியின் நாயகனே இறைவா, திருஅவையின் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் நமக்கு முன்னோடியாக இருந்து தூய சலேசியாரின் வழியில் நடந்து நமக்குள் கடவுளின் அன்பை, மாட்சிமையை உருவாக்க பாடுபட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பை அபரிமிதமாக அள்ளித்தரும் இறைவா, இவ்வுலக வாழ்வில் தீயசக்திகளினால் ஏற்படும் அவல நிலைகளிலிருந்து மீட்படையவும், ஒருவரையொருவர் நேசிக்கும் உன்னத நிலையை உமது அன்பினால் மட்டுமே பெறமுடியும் என்னும் பேருண்மை எங்களில் உருவாக வேண்டுமென்று தூய பிரான்சிஸ் சலேசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. எல்லாம் வல்ல இறைவா, அச்சம் தரும் வகையில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களை உம் இறைப்பிரசன்னத்தால் மாற்றி நாட்டிற்கு தேவையான நல்ல திட்டங்களை கொண்டுவந்து மக்களை பாதுகாத்து அரவணைக்கும் நல்ல தலைவர்களாக மாறவும் சேவை செய்யும் மனப்பான்மை அவர்களிடையே வளரவும் அருள்புரியுமாறு தூய பிரான்சிஸ் சலேசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

| 25.01.2025 | திருத்தூதர் புனித பவுலின் மனமாற்றம் | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. பத்மாவதி*

இறையேசுவில் இனியோரே, திருவிவிலியத்திலும், திருச்சபையின் வரலாற்றிலும் எத்தனையோ மனமாற்ற நிகழ்வுகளைக் காண்கின்றோம். ஆனால் தூய பவுலடிகளாரின் மனமாற்றத்திற்கு மட்டும், விழாயெடுத்து சிறப்பிக்கும் அளவிற்கு ஏன் இத்துனை முக்கியத்துவம். தூய பவுல் தர்ச் நகரிலே, உரோமைக் குடியுரிமையுடன், செல்வச் செழிப்புமிக்க குடும்பத்திலே பிறந்தவர். இவரது இயற்பெயர் "சவுல்" யூத மதக்கோட்பாடுகளைத் திறம்படச் செயல்படுத்தியவர். தன்னுடைய இளவயதிலேயே எருசலேம் சென்று கமாலியேல் என்ற யூத மத ரபியிடம், யூத சட்டங்களைத் திறம்படப் பயின்றவர். எனவேதான் "கிறிஸ்தவம்" யூத மதச் சட்டங்களுக்குப் புறம்பானது எனக்கருதி கிறிஸ்தவர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்குவதில் மிகவும் முனைப்புடன் செயல்பட்டார். சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்த இயேசு என்னும் குற்றவாளி எவ்வாறு மெசியாவாக இருக்க முடியுமென்பது அவரது வாதம். சவுல் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்த தமஸ்க்கு நகரை நோக்கி சென்றுக் கொண்டிருக்கும்போது இயேசு அவரைச் சந்திக்கின்றார். இயேசுவால் தொடப்படுகிறார். அனைத்து உண்மைகளையும் அறிந்துக்

கொள்கிறார். திருமுழுக்குப் பெற்று "பவுல்" என்ற பெயருடன் மீட்பு பெறுகிறார். தான் பெற்றுக்கொண்ட மனமாற்றமானது பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும்படி அதற்காக செயலுரு கொடுக்கின்றார். வெறும் சட்டங்களும் சம்பிரதாயங்களும் மட்டுமெல்லாமல், மாறாக இயேசுவின் கட்டளையைக் கடைப்பிடிப்பதிலும் தான் நமது மீட்பு அடங்கியிருக்கின்றது என்று எடுத்துரைக்கின்றனர்.

நற்செய்தி அறிவிப்பவர்களை நாசமாக்க வேண்டும் என்று எண்ணியவர் "நற்செய்தி அறிவிக்காவிடில் எனக்கு ஐயோக்கேடு" (1கொரி. 9:16) என்று கூறி நற்செய்தியை பட்டித் தொட்டிகளிலெல்லாம் பறைசாற்றுகிறார். அவ்வாறு பறைச்சாற்றும்போது இன்னல்கள், துன்பங்கள், தொல்லைகள், சிறைவாசம், கசையடிகள், பசி, பட்டினி என அனைத்தையும் இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டார் (1கொரி. 4: 9-13, 2கொரி. 4:8). இத்துன்பங்கள் எதுவும் என்னை கிறிஸ்துவிடமிருந்து பிரிக்க இயலாது" என்று முழக்கமிடுகிறார் (உரோ. 8: 35-39). பல துன்பங்கள் அனுபவித்தாலும் விசுவாசத்தில் தளராது நிற்கும் இவர் அளிக்கும் பதில் "கிறிஸ்துவின் பொருட்டு இவ்வுலகத்தின் மேன்மையும் செல்வாக்கையும் குப்பையெனக் கருதுகிறேன் என்கிறார். நாம் இவ்வாறு செயல்படும்போதுதான் பவுலடிகளாரைப்போல் இறுதியில் "நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன், என் ஓட்டத்தை முடித்துவிட்டேன், எனது விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டுள்ளது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே, அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார் (1தீமொ. 4: 7-8) என்று கூற முடியும். இன்று இத்தகைய மனமாற்ற பெருவிழாவினைச் சிறப்பிக்கும் நாம் நமது மனமாற்றத்திற்காக இன்றைய திருப்பலியில் நம்மையே ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்புத் தந்தையே இறைவா, உமது பணியைத் தொடர்ந்து செய்யும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து நல்ல உடல் உள்ள ஆன்ம சுகம் தந்து தூய ஆவியின் துணையோடு வழிநடத்தவும், உமது பணியைத் திறம்படச் செய்யும் ஆற்றலைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்புத் தந்தையே இறைவா, இளையோரின் மனதில் புதைந்துக் கிடக்கும் ஆற்றலை அவர்கள் கண்டுணர்ந்து இறை வலிமைப்பெற்று தங்களிடமுள்ள திறமைகளை ஆக்கச்செயலுக்கும், தாங்கள் குடும்பங்கள், பங்குத்தளங்கள், கல்வி கற்கும் இடங்கள் போன்றவைகளில் நற்செயல்கள் புரியவும் வளமான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ளும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் ஊற்றே இறைவா, திருச்சபையிலுள்ள கிறிஸ்துவ மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள துன்பங்கள், எதிர்ப்புகள், கொடுமைகள் இவைகளிலிருந்து விடுதலையும், இயேசு கிறிஸ்துவை அறியாத மத வேற்றுமையுள்ளவர்கள் தூய பவுலடியாரைப் போன்று இயேசுவால் தொடப்படவும், அதனால் மனமாற்றமடைந்து அவர்களும் இறைப்பணியில் ஆர்வமுடன் ஈடுபடும் தெய்வீக உணர்வை விரைவாய் அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 26.01.2025 | பொதுக்காலம் 3ம் ஞாயிறு மற்றும் இந்திய குடியரசு நாள் | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. லதா சுரேஷ்*

*நெக. 8: 2-4, 5-6, 8-10 1கொரி. 12:12-30லூக். 1: 1-4, 4:14-21*

இதயத்தின் வேண்டுதல்களை எடுத்துக் கூறுவது வழிபாடு. இறைவனோடு நம்மை நெருக்கமாக இணைய பாதைக்காட்டும் ஒளி விளக்கு. இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் அனைத்தும் இறைநூல் பற்றியும் இணைச்சட்டங்கள் நம்மை வழிநடத்தவும், வாழ்வளிக்கவும் வல்லதாக உள்ளது என்பதை விளக்குகிறது. இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவர் இஸ்ரேயலுக்குக் கொடுத்த மோசேயின் திருநூலை எஸ்ரா வாசிக்கும்பொழுது மக்கள் அதன் பொருணை உணர்ந்து கண்ணீர் வடித்தனர். கண்ணீர் என்பது காணிக்கை மட்டுமல்ல, உள்ளத்தின் மாற்றம் இறையச்ச உணர்வைக் காட்டும் அடையாளம். இதனையே கடவுளும் எதிர்நோக்குகின்றார். நாம் எவ்வளவு ஈடுபாட்டோடு கடவுளோடு அவரில் மகிழ்வுருகின்றோமே அதுவே நம் வலிமை. அவரோடு இணைந்து அவரது திருச்சட்டத்தின்படி வாழ்வோருக்கு அனைத்து நன்மைகளும் ஒளிமயமான வாழ்வும் இதயத்தில் எல்லையில்லா மகிழ்வும் உண்டாகின்றது. தம் எண்ணத்தின்படி வாழ்வது மனிதஇயல்பு. இதே இறைசித்தத்தின்படி வாழ்வோர் பொன்னினும் பசும் பொன்னினும் மேலானவராக வாழ்வு பெறுகின்றனர். இறைச்சித்தத்தினையும் இறைவனே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரைப்பற்றி அறிந்துக்கொள்ளவும் வருங்கால தலைமுறையினரை வழிநடத்த உதவுவது நூல்களே அதனால் தான் எசாயா சுருளேட்டில் மெசியா வருவார் அவர் இவ்வாறு இருப்பார் அவரது பிறப்பு, வாழ்வு, இறப்பு இவ்வாறு இருக்கும் என்பதை தீர்க்கத் தரிசனமாக எழுதப்பட்டதாக இருந்தது. இயேசு கிறிஸ்துவும் அதற்கு சாட்சியாக வாழ்ந்து இறையரசை இம்மண்ணில் செழித்தோங்கச் செய்தார். இறைமக்களாகிய நம்மில் இங்கு யாரும் உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அருளும் ஆசீரும் வழங்கப்பட்டுள்ளன என்பதை நாம் உணர வேண்டும். இறையரசை மண்ணில் செழித்தோங்கச் செய்ய நம் வருங்கால சந்ததினருக்கும் நம் வாழ்வும் ஒரு உதாரண நூலாக அமைய வாழ்ந்துக் காட்ட இத்திருப்பலியில் இணைந்து இறைச்சாட்சிகளாக வாழ்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆண்டவருடைய ஆவியை அருள்பொழிவாகப் பெற்ற எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் இருளில் நடக்கின்ற மக்களை இறைப்பிரசன்னத்தை காணச் செய்யும் இறைவார்த்தையைக் கொண்டுச் செல்லும் நல்ல தூதுவர்களாக கொடத்தீரே. அவர்கள் பெற்ற அருள்பொழிவில் நிலைத்திருக்கவும், இறைவார்த்தையை எவ்வித அச்சவுணர்வுமின்றி அறிவிக்கவும் இறையரைசக் கட்டியெழுப்பத் தேவையான வல்லமையை அளித்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. திருச்சட்டத்தின் நாயகனே எம் இறைவா, இன்று நாங்கள் வாழும் உலகில் சட்டங்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இல்லாமல் பணம்

படைத்தவருக்கும் பதவியில் உள்ளவர்களுக்கும் வளைந்துக் கொடுக்கும் நிலையில் உள்ளது. இதனால் உலகில் குற்றங்கள் பெருகிக்கொண்டே போகின்றது. பணம் இருப்பவனும் இல்லாதவனுக்கும் பாகுபாடின்றி சமநீதி கிடைக்கவும், சட்ட ஒழுங்கு அனைவருக்கும் சமமாகக் கிடைக்கச் செய்திட நல்ல தலைவர்கள் நாட்டையாளும் சமதர்ம சமுதாயம் அமைந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. விடுதலையின் நாயகனே எம் இறைவா, உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றே அதுபோல் கிறிஸ்தவர்கள் பலப்பிரிவினர் இருந்தாலும் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே உடலின் உறுப்புகளாக நாம் இருக்கின்றோம். இயேசுவைப்பற்றிய நற்செய்தியை உலகிற்கு அறிவிக்கவே நாம் கிறிஸ்துவர்களாக வாழ்கின்றோம் என்பதை உணர்ந்து செயல்படத் தேவையான அருள்வரங்களைப்பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. விடுதலையின் நாயகரே எம் இறைவா, இன்று நாம் குடியரசு தினவிழாவினைச் சிறப்பிக்கின்ற இந்நாளில் நம்மிடையே பலபேர் அடிமைகளாக, தங்கள் உரிமைகளை இழந்து வாழ வழியின்றி அலைக்கழிக்கப்படுகின்றனர். இவ்வாறே மதப்பிரச்சனைகளும், கள்ளச்சந்தையில் கலப்படப் பொருட்களும் பல்வேறு சூழ்நிலையில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் உம் பிள்ளைகளை நிறைவான விடுதலையளித்து காத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 27.01.2025 | புனித மெர்ஸி ஆஞ்சலா திருவிழா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திருமதி. ராணி சம்பந்தன்*

இன்று நாம் புனிதை மெர்ஸி அஞ்ஞேசம்மாள் நினைவில் கொள்வோம். இவர் கி.பி. 1474ல் பிறந்து கி.பி. 1540ல் இறைவனடி சேர்ந்தார். ஒருவரும் பாவிகளாக மரிக்க கூடாது என்ற எண்ணம் கொண்டவராக இருந்தார். இந்த ஒரு அருமையான நோக்கத்திற்காகவே வானதூதர்களிடமும் புனிதர்களிடமும் பேசும் பேறு இவருக்கு கிடைத்தது. திவ்விய நற்கருணையின்மீது அளவற்ற பிரியம் கொண்டு அந்த பேற்றினை உயிராக மதித்து வந்தார். உலகியல் நடப்பை கண்ட இவருக்கு இளம் பெண்களிடமும் தாயர்மார்களிடமும் இரக்கம் பிறந்தது குடும்பங்களில் நல்ல தாய்மார்கள் உருவாவதில்லை. அதற்கான கல்வி அவர்களுக்கு கிடைப்பதில்லை. அதனால் சமூகத்தில் பல சீர்கேடுகள் நடப்பதைக்கண்டு மனம் நொந்தார். அதற்காகவே இளம் பெண்களுக்கு கிறிஸ்தவ கல்வி பயிற்சி அளிப்பதற்காக சபை ஒன்றை நிறுவினார். தாழ்ச்சி நிறைந்த பெண்மணியாக அவர் விளங்கியதால் தனக்கு பிரியமான புனித ஊர்சுலம்மாள் என்ற புனிதையை அதன் பரலோக பாதுகாவலியாக நியமித்து, அவரது பெயரையே சபைக்கும் வைத்தார். புனித மெர்ஸி அஞ்ஞேசம்மாளின் சிந்தனையான "நீ அடைய விரும்புவதை அடையும்படியாக பலவந்தம் செய்யாதே. கடவுள் அனைவருக்கும் மனச்சுதந்திரம் கொடுத்துள்ளார். தனக்கு கீழ்ப்படியும்படி யாரையும் அவர் கட்டாயப்படுத்துவதில்லை" என்ற நோக்கத்தை மனதில் கொண்டு பாவிகள் மனந்திரும்ப வேண்டும் என்ற வேண்டுதலோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பாசமிகு இறைவா, திருச்சபையின் மக்களை பாசத்துடன் அணைக்கும் நம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் தற்கால சமூக நிலையையொட்டி இறையாட்சியை கொண்டுவரும் வழிமுறைகளையும் பக்தி முயற்சிகளையும் திறம்பட பயன்படுத்தி அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் சக்தியாக மாற உம்மை மன்றாடுகிறோம்.
2. நீர் தேர்ந்துகொண்ட மக்களோடு உடன்படிக்கை செய்து கொண்டவரே உமது பேரன்பை அனைத்து மக்களும் அறிய செய்யும்படியும், தலைமுறை வழியாக நிலைக்கும்படி செய்யவும், உமது உயிரையே பணயமாக வைத்து மீட்டருளிய மீட்பின் பலனை அனைவரும் உணர்ந்து வாழ உம்மை மன்றாடுகிறோம்.
3. நலமளிக்கும் இறைவா, நோயுற்றவர்களுக்காக உம்மை மன்றாடுகிறோம். குடும்பங்களிலும், மருத்துவமனைகளிலும், முதியோர் இல்லங்களிலும் நோயின் கொடுமையால் வாடி, நலிந்து கொண்டிருக்கும் அனைத்து நோயாளிகளையும் உமது திருவுளப்படி நோயின் வேதனை நீங்கி நலமடையவும் அவர்களை கவனிக்கும் மருத்துவர், செவிலியர் யாவரையும் காத்து வழிநடத்த வேண்டியும் உம்மை மன்றாடுகிறோம்.

| 28.01.2025 | புனித தாமஸ் அக்குவினாஸ் திருவிழா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திரு. I. ஜான் சுரேஷ்*

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நம் தாய் திருச்சபையானது கத்தோலிக்க கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களின் பாதுகாவலர் புனித தாமஸ் அக்குவினாஸ் விழாவை கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. மகன் படித்து பட்டம் பெற்று அரசவையின் மகிமையில் ஒளிர்வான் என்று காத்திருந்த தந்தைக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஏனெனில் ஒருமுறை நேப்பிள்ஸ் பகுதியில் மறையுரை ஆற்றிய புனித ஜூலியனின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, அவரை சந்தித்து தமது விருப்பத்தை தெரிவித்ததின் மூலம் 18ம் வயதில் சாமிநாதர் சபையில் சேர்ந்து தவ உடை ஏற்றார். பல இன்னல்களுக்கிடையே வெற்றிகண்டு பிறகு புனித பெரிய ஆல்பர்ட்டிடம் நான்கு ஆண்டுகள் கற்ற பிறகு குருவானார். திருத்தந்தை 6ம் அர்பனின் முயற்சியால் முதன் முதலில் நற்கருணை திருநாள் திருச்சபையில் ஆரம்பமானது. எனவே அதற்கு தேவையான திருப்பலி, மாலை ஆராதனை போன்றவற்றை எழுதினார். நாம் நற்கருணை எழுந்தேற்றத்தின்போது பாடும் "மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை" என்னும் பாடலையும் இன்னும் பிற பாடல்களையும் இயற்றினார். ஒருமுறை லயன்சு செல்லும் வழியில் கீழே விழுந்து அதன்மூலம் உடல்நலம் குன்றி 07.03.1274 இறைவனின் பதம் அடைந்தார். திருத்தந்தை 22ம் யோவான் 1323 ஜூலை 18ல் இவரை புனிதராகவும், திருத்தந்தை 5ம் பத்திநாதர் 14.04.1567ல் "அக்குவின் தோமா திருச்சபையின் மறைவல்லுநர்" என்று அறிவித்தார். தூய அக்குவினாசின் கல்வி அறிவும், கவித்திறனும் நம் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் பிறப்பிடமே எம் இறைவா, வழிதவறிபோன ஆட்டுக்குட்டியை கண்டுபிடித்து அதை பராமரிப்பதுபோல வழிதவறி பாதை அறியாத எங்களை வழிநடத்த நீர் எமக்கு தந்த திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் ஆகியோரை ஆசீர்வதித்து எங்களை திறம்பட வழிநடத்த தேவையான அருளைத்தர வேண்டி தூய தாமஸ் அக்குவினாஸ் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் சுனையே இறைவா, கத்தோலிக்க கல்வி நிறுவனங்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இந்நிறுவனங்கள் மக்களுக்கு உண்மையான தொண்டாற்றி அதன் மூலம் திருச்சபைக்கும் மற்றும் சமுதாயத்திற்கும் தேவையான மாணவர்களை அளித்திட வேண்டுமென்று தூய தாமஸ் அக்குவினாஸ் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் அமுதமே இறைவா, இன்று நாங்கள் கொண்டாடும் கத்தோலிக்க மறைக்கல்வி நிறுவனங்களின் பாதுகாவலரான தூய அக்குவினாஸ் போல நாங்களும் உண்மையாக உமக்கென்று வாழ்ந்து அதன்மூலம் உமக்கு சாட்சி பகர வரமருள வேண்டுமென்று தூய தாமஸ் அக்குவினாஸ் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

| 31.01.2025 | புனித ஜான்போஸ்கோ திருவிழா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது இளைஞர்களின் ஆசிரியரும், நண்பரும் இறைநம்பிக்கையின் நாயகருமான புனித ஜான் போஸ்கோவின் நினைவு விழாவினை கொண்டாடுகிறது. தூய ஜான் போஸ்கோவின் வாழ்வு செபத்தின் சிறப்பை உணர்த்தும் உன்னத வாழ்வு. இறைவன் இவரது செபத்திற்கு இறங்கி எத்தனையோ அளப்பரியச் செயல்களை ஆற்றியுள்ளார். தொன் போஸ்கோ என்று அன்போடு அழைக்கப்படும் இவர், செபத்தின் இன்பத்தை, மகிமையை தன் வாழ்வில் பிரதிபலித்தவர். செபத்தின் வல்லமையால் புதுமைகள் பல செய்தவர். செபத்தின் ஆற்றலால் வல்லவராகத் திகழ்ந்தவர். "தந்தை ஜான் போஸ்கோவினுடைய வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதும் செபமாகவே கழிந்தது" என்றால் அது மிகையாகாது. அவரது செபமும், தபமும், திருப்பலியும், புண்ணியங்களும் வாழ்வின் ஒவ்வொரு அசைவும் நம்பிக்கையையும், மனிதாபிமானத்தையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தும் அடையாளமாகவே அமைந்தது. அவரின் விழாவை நினைவுகூறும் நாமும், நமது செபவாழ்வு எத்தகையதாக இருக்கிறது என்பதை சீர்தூக்கி பார்க்க அழைக்கப்பட்டுள்ளதை மனதில் வைத்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே, திருஅவையை வழிநடத்தும் திருநிலையாளர்கள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கடவுள் மீது வைக்கும் நம்பிக்கையின் ஆழத்தை எமக்குக் காட்டியவரே, உம்மை எமது வாழ்வில் பின்பற்றுவதன் மூலம் நிச்சயம் அதே நம்பிக்கையின் ஆழத்திற்கு செல்லமுடியும், வாழ்வை உம் மனநிலையோடு அணுக முடியும் என்பதை உணர்ந்தவர்களாக வாழ தேவையான வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இறைவனை நம்பி செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப்போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து எம் விசுவாசத்தை ஆழப்படுத்தும் ஆற்றலை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கத்தின் இறைவா, எங்கள் வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம் போன்ற வேளைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மை என்றும் பற்றிக்கொண்டு வாழும் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி 2 : நம்பிக்கையில் வளர ...

## புத்தாண்டில் புதிதாய் பிறப்போம்

*திரு. P. விக்டர்*

புத்தாண்டு என்பது ஒவ்வொரு ஆண்டின் துவக்கத்திலும் வருவது தான் என்றாலும் அந்நாளை சிறப்பாகக் கொண்டாடி வரவேற்பதில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான முறைகளைக் கையாள்வர் இளைஞர்களும் இளம் பெண்களும் புத்தாண்டு துவங்கும் அந்த இரவில் ஆட்டம் பாட்டத்தோடும் ஆரவாரத்தோடும் உற்சாகமாய் காணப்படுவர். நாற்பதைக் கடந்தவர்களும் ஐம்பதைக் கடந்தவர்களும் கூட இந்த உற்சாகத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு புத்தாண்டை வரவேற்பதை பல இடங்களிலும் காணலாம். இதற்கு முற்றும் மாறாக ஆன்மீகவாதிகளோ அந்த இரவில் ஆலய வழிபாடுகளில் மூழ்கி ஆண்டவனை ஆராதித்து புத்தாண்டை வரவேற்பர். அன்று பெரும்பாலான வீடுகளில் பெருத்த விருந்தும் பெரும் மகிழ்வுமாக இருக்கும். ஒரு சில குழுவினர் தங்களின் உறவுகளைச் சந்தித்து வாழ்த்து சொல்லி பெரியவர்களிடம் ஆசி பெறும் நாளாக இதைக் கொண்டாடுவர். குழந்தைகளும் பெரியவர்களும் புத்தாடை அணிந்து குதூகலிக்கும் நாட்களில் இதுவும் ஒன்றாகும். அன்றைய தினம் எல்லா பெரிய உணவு விடுதிகளும் விருந்தினர்களால் நிரம்பி வழியும் அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளில் பலர் அன்றைய தினம் தங்கள் அறைகளில் ஒரு மாற்றத்தை உண்டாக்கி புத்தாண்டை வரவேற்பர், இப்படி பல வழிகளிலும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெறுவதை நாம் நன்கறிவோம். இவை யாவுமே நமது தனிப்பட்ட வாழ்விலோ அல்லது ஆன்மீக வாழ்விலோ எந்த மாற்றங்களையும் கொண்டுவருவதில்லை ஒருநாள் கொண்டாட்டம் முடிந்தவுடன் மீண்டும் பழைய வாழ்வுக்கே சென்று விடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை இந்தப் புத்தாண்டில் புதிதாய் பிறக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றார். ஆண்டு மட்டும் புதிதாய் பிறந்தால் போதாது. நாமும் புதிதாய் பிறந்தவர்களாக மாற வேண்டும் என்று விரும்புகின்றார், அதில்தான் உண்மையான மகிழ்ச்சி உள்ளது. ஆண்டவரது இந்த எதிர்பார்ப்பை சிந்தித்து

துவங்கும் பொழுது கீழ்க்கண்ட மூன்று கேள்விகள் எழுகின்றன. ஆவை

1. புதிதாய் பிறப்பது என்றால் என்ன?
2. நாம் ஏன் புதிதாய் பிறக்க வேண்டும்?
3. நாம் புதிதாய் பிறப்பதால் என்ன நன்மை?

ஒவ்வொரு கேள்விக்கும் விடை காண முயல்வோமா?

**புதிதாய் பிறப்பது என்றால் என்ன?**

புதிதாய் பிறக்க வேண்டும் என்பதால் பழைய வாழ்வில் ஒருமாற்றம் தேவை என்பது விளங்கும் இத்தகைய புதுவாழ்வை, குறைகளற்ற நிறைவாழ்வை நமக்கு வழங்குவதற்காகத்தான் ஆண்டவராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்தார். குறைகளற்ற நிறைவான மனிதனைத்தான் கடவுள் படைத்தார். தன்னுடைய மகிமையின் சாயலை மனிதனுக்கு வழங்கி தெய்வ சாயலாகவே அவர்களைப் படைத்தார் (1:27). அந்த சூழலில் கடவுள் மனிதரோடு உரையாடினார், உறவாடினார். அவர்களோடு உலாவினார். மனிதனுக்கு எப்பொழுதுமே இருப்பதைவிட்டுவிட்டு பறப்பதின்மேல்தான் ஆசை இருக்கும். இதற்கு நமது முதல் பெற்றோரும் விதிவிலக்கல்ல. தாம் கொண்டிருந்த "கடவுளின் சாயல்" என்கிற உயர்நிலையை உணராதவர்களாய் "கடவுளைப்போல மாறவேண்டும்" என்கிற பொய்யான ஆசைக்கு இணங்கினார். விலக்கப்பட்ட கனியை உண்ண வேண்டாம் என்று கடவுள் கட்டளையிட்டதை அறிந்திருந்தும் தங்களது ஆசைக்கு அடிப்பணிந்தனர். ஆண்டவரின் கட்டளையை ஆசை மேற்கொண்டது. விளைவு "பாவத்திற்கு அடிமையாயினர்" இதன்மூலம் பிசாசுக்கு அடிமைகள் ஆயினர். பாவத்தின் சம்பளம் மரணம் (உரோ. 6:23) என்பதற்கிணங்க பாவமும், மரணமும் இன்றி படைக்கப்பட்ட மனித இனம் பாவம் செய்ததின் நிமித்தம் "நீ மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாய், ஆகையால் மண்ணுக்கே திரும்புவாய் (தொ.நூ. 3:19) என்று கடவுளால் சபிக்கப்பட்டது.

பிசாசின் பிடியிலிருந்தும் பாவத்தின் சாபத்திலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள மனிதன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் தன்னைவிட்டு விலகிச்சென்ற மனிதனை மீட்பதற்காக அவனுக்கு புதுவாழ்வு தருவதற்காக தன் ஒரே மகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். பிசாசின் ஆளுகையிலிருந்து ஆண்டவர் இயேசுவின் ஆளுகைக்குள் நுழைவதே "புதிதாய் பிறப்பதாகும்" இது நம்மாலான செயல் அல்ல, மாறாக, ஆண்டவர் மனித இனத்தின்மீது கொண்டிருந்த நிலையான அன்பினிமித்தம் இப்புதிய வாழ்வை நமக்கு வழங்கினார்.

**நாம் ஏன் புதிதாய் பிறக்க வேண்டும்?**

படைய வாழ்வின் பாதிப்புகளை நன்கு அறிந்தால்தான் புதிதாய் பிறக்கவேண்டும் என்கிற எண்ணம் உண்டாகும். அப்படியானால் புதிதாய் பிறக்காத நிலையில் நமது வாழ்வு எவ்வாறு உள்ளது? நம்மை அடிமைப்படுத்தும் விதிகள் பலகொண்ட கடன் பத்திரத்தால் நம்மை சிறையாக்கி வைத்திருந்தான் பிசாசு (கொலோ. 2:14). இதன் நிமித்தமாக கடவுளுக்கும் நமக்குள்ள உறவு துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தது. கடவுளைக்குறித்த அறியாமையில் நம்மை வழிநடத்தி அவரை உண்மையாய் ஆராதிக்கத்

தெரியாதவர்களாக, ஜெபிக்கத் தெரியாதவர்களாக வைத்திருந்தான். கடவுளோடு நமக்குள்ள நிலையான வாழ்வைக்குறித்த அறிவை தெரிந்துக்கொள்ள முடியாதவாறு வைத்திருந்தான். உலகப் பொருட்களின்மீதும் பணத்தின்மீதும் நமக்குள்ள ஆசையைத் தூண்டிவிட்டு நம்மைத் தனக்கு அடிமைகளாக்கி வைத்திருந்தான். இயேசு சிலுவையில் மரித்ததால் நமது சாபங்களிலிருந்து நமக்கு விடுதலை உண்டானது (கலா. 3: 13) என்பதையும் அவரது தழும்புகளால் நாம் வியாதிகளிலிருந்து சுகமாக்கப்பட்டோம் என்பதையும் (1பேதுரு 2:24) அவரது இரத்தத்தினால் நாம் விலைக்கொடுத்து வாங்கப்பட்டடோம் என்பதையும் (தி.ப. 20:28) நம்ப முடியாதபடி வைத்திருந்தான். இத்தகைய அடிமை வாழ்விலிருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும் விடுதலைப்பெற்று நிலைவாழ்வை நோக்கி பயணிக்க வேண்டுமானால் நாம் புதிதாய் பிறந்தாக வேண்டும் (யோவா. 3:5).

புதிதாய் பிறப்பது என்பது மூன்று அனுபவங்களை உள்ளடக்கியதாகும். முதலாவது "கடவுளின் பார்வையில் நான் ஒரு பாவி" என்பதை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவரின் அன்பை முழுமையாய் உணர்ந்து அனுபவிக்கும் பொழுதுதான் இந்த நிலையை எட்ட முடியும். இரண்டாவது இந்த பாவியை மீட்பதற்காகத் தான் இயேசு உலகிற்கு வந்து மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதை நம்ப வேண்டும். இயேசுவின் மரணமும் உயிர்ப்பும் ஏதோ ஒரு வரலாற்று நிகழ்வுமட்டுமல்ல, மாறாக அது நமக்குள் ஒரு மனமாற்றத்தை உண்டாக்கும் நிகழ்வாகும். மூன்றாவதாக, இன்றும் உயிருடன் வாழ்கின்ற இயேசுவிடம் நமது பாவங்களை அறிக்கைச ்செய்து பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

முதல் இரண்டு அனுபவங்கள் இல்லாமல் இந்த மூன்றாவது அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. இந்த மூன்று அனுபவங்களையும் அனுபவிக்கிறவரே புதிதாய் பிறந்தவர் ஆவார். இதை நாம் ஒவ்வொருவரும் புத்தாண்டின் துவக்க நாளில் மட்டுமல்லாது, ஒவ்வொரு நாளிலும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இந்த அனுபவத்தில் இறுதிவரை நிலைத்திருப்பவரே, நிலை வாழ்வுக்குத் தகுதியுடையவர் ஆவார் (மத். 10:22) புதிதாய் பிறக்காமல் நிலை வாழ்வைக் காணமுடியாது நுழையவும் முடியாது.

**புதிதாய் பிறப்பதால் என்ன நன்மைகள்?**

புதிதாய் பிறப்பதால் நமது வாழ்க்கை முறை மாறுகிறது. நமது சிந்தனை மாறுகிறது. நமது செயல்கள் மாறுகிறது. நமது வாய் வார்த்தைகள் நமது பேச்சு மாறுகிறது. நமது நல்ல மாற்றம் பிறரையும் மாற்றத்திற்கு உள்ளாக்குகிறது. புதிதாய் பிறப்பதனால் ஒருவரையொருவர் அன்பு செய்து வாழும்வாழக்கைக்கு மாறுகிறோம். இருப்பவர் இல்லாதவரோடு பகிர்ந்து வாழும் வாழ்க்கையை வாழ விருப்புவர். வாழ்வில் இறைவனுக்கு முதலிடம் கொடுத்து இறைவனோடு நெருங்கிய உறவுடன் வாழ்கிறவர்களாய் காணப்படுவோம். இதுதான் இறையாட்சி என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், "இறையாட்சி உங்களுக்குள்ளே செயல்படுகிறது" (லூக். 17:21) என்று இயேசு குறிப்பிட்டது இதைப்பற்றியே. புதிதாய் பிறந்தவர்களின் சிந்தையை பரிசுத்த ஆவியானவர் ஆளுகை செய்வார். அதனால் அவர்கள், உண்மையானவை எவையோ,

கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, பாராட்டுக்குரியவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ இவற்றையே சிந்திக்கிறவர்களாய் காணப்படுவர்.

இவர்களிடத்தில் மட்டுமே அமைதி அருளும் கடவுள் தங்குவார் (பிலிப். 4:8-9) என்று திருவிவிலியம் நமக்குக் கற்றுத்தருகின்றது. புதிதாய் பிறந்த இவர்கள் கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் இருப்பர். அவர்கள் இருக்கும் இடத்தில் மகிழ்ச்சி இருக்கும், அவர்கள் இருக்கும் இடத்தில் மன அமைதி இருக்கும். அவர்கள் வாழும் இடங்களில் சண்டை சச்சரவுகள் இருக்காது. அவர்களது வாழ்க்கை பிறருக்கு சான்று பகர்கின்ற வாழ்க்கையாக இருக்கும். அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயல்களும் கடவுளுக்கு உகந்ததாய் இருப்பதனால் அச்செயல் கடவுளை மகிமைப்படுத்தும். மொத்தத்தில் ஒரு குட்டி பரலோகத்தையே இப்பூமியில் காணலாம். திருவிவிலியத்தில் ஒவ்வொரு வார்த்தைகளும் பரிசுத்த ஆவியாரின் ஏவுதலால் எழுதிக் கொடுக்கப்பட்டு, மனிதனை சீராக்குவதற்கும் நேர்மையாய் வாழ பயிற்றுவிப்பதற்கும் பயனள்ளது (2திமொ. 3:16). உயிருள்ள ஆற்றலுள்ள இந்த இறை வார்த்தைகளின்மீது ஆர்வம் உள்ளவர்களாய் இருப்பர். இறைவார்த்தைக்கு சான்று பகரும் வாழ்வை வாழ்வர். இதுதான் புதுவாழ்வின் பயன்கள்.

இப்படிப்பட்ட புதுவாழ்வுள்ளவர்களாய் நாம் இந்த புத்தாண்டில் நுழைய வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்தமாகிறோம், புத்தாண்டின் கொண்டாட்டங்களுக்கு ஆய்தமாகிறோம். இப்புத்தாண்டில் புதிதாய் பிறப்பதற்கு ஆயத்தமாவோம், இறைவனின் ஆசி எந்நாளும் இருக்கும்.

## தேவசகாயம் பிள்ளை மறைசாட்சியான வரலாறு

*திரு. ஜான் அலெக்ஸ்*

### இளமைப் பருவம்

மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை இன்றைய குமரி மாவட்டத்திலுள்ள நட்டாலம் என்னும் கிராமத்தில் 1712ஆம் ஆண்டு, ஏப்ரல் 23ஆம் நாளன்று நாயர் குலத்தில் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்டப் பெயர் நீலகண்டன் என்பதாகும். சிறுவயதிலேயே சமசுகிருதம், கலை ஆகியவற்றை படித்து அறிந்தார். பெரியவரானதும் வில் வித்தை, வர்ம கலைகள், போரிற்கான ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் படித்து அறிந்தார். அதன் பின்னர் இவர் மார்த்தாண்ட வர்மாவின் அரண்மனையான பத்மநாபபுரம் கோட்டையில் கருவூல அதிகாரியாக பணியில் சேர்ந்தார். அதன் பின்பு இவருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இலந்தவிளை அருகே உள்ள குஞ்சு வீட்டு நாயர் சமுதாயத்தை சார்ந்த பார்கவி அம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. அவ்வேளையில், அவரது குடும்பத்தில் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள் நீலகண்டனை மனதளவில் மிகவும் பாதித்தன.

### மனமாற்றம்

இந்நிலையில் 1741இல் குளச்சல் துறைமுகத்தைப் பிடிக்க வந்த டச்சு

படைகள் மார்த்தாண்ட வர்மாவின் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. டச்சு படைத்தலைவரான கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த பெனடிக்டுஸ் தே டிலனாய் (Benedictus De Lennoy) அவருடைய படைகளுடன் சிறைப் பிடிக்கப்பட்டார். பின்னர் டிலன்னாயை தமது படையின் ஆலோசகராக மார்த்தாண்ட வர்மா நியமித்ததால், அவர் நீலகண்ட பிள்ளையின் நண்பரானார். ஒருநாள் நீலகண்ட பிள்ளை மிகுந்த கவலையில் இருந்ததைக் கண்ட டிலன்னாய், அதற்கான காரணத்தைக் கேட்டார். அதற்கு நீலகண்டன், தமது குடும்பத்துக்கு சொந்தமான கால் நடைகள் இறந்து போவதும், பயிர்கள் நாசம் அடைவதும் தொடர்கதையாகி பொருளாதார ரீதியாகப் பெரும் இழப்பை சந்தித்து வருவதாக தெரிவித்தார்.

அப்போது திருவிவிலியத்தில் உள்ள யோபுவின் கதையை டிலன்னாய் சொல்லி, நீலகண்டனுக்கு கிறித்தவ சமயத்தை அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவரிடம் கேட்டு தெரிந்துகொண்ட நீலகண்டன், நாளடைவில் திருமுழுக்குப் பெற்று கிறித்தவராக விருப்பம் கொண்டார். திருநெல்வேலி மாவட்டத்தின் வடக்கன்குளம் கத்தோலிக்க தேவாலயத்தின் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்த ஜோவான்னி பத்தீஸ்தா புத்தாரி (Giovanni Battista Buttari) நீலகண்ட பிள்ளைக்குத் திருமுழுக்கு வழங்கி, "இலாசர்" (Lazarus) என்பதற்கு நிகரான "தேவசகாயம்" என்னும் பெயரைச் சூட்டினார். கத்தோலிக்க மதத்திற்கு மாறியதும் தேவசகாயம் பிள்ளை பலரிடமும் இயேசு கிறித்துவை பற்றிப் போதித்து, பலரை கிறிஸ்தவ மதத்திற்கு மனம் மாற்றினார். இவரது மனைவி இலந்தவிளை அருகே உள்ள குஞ்சு வீட்டு நாயர் சமுதாயத்தை சார்த்த பார்கவி அம்மாள் ஆவார். அவரும் "ஞானப்பூ" எனும் பெயருடன் திருமுழுக்கு பெற்று கத்தோலிக்கரானார்.

### எதிரிகளின் சூழ்ச்சி

"தேவசகாயம்" என்ற பெயருடன் கிறித்தவரான நீலகண்டன், கடவுள் முன்னிலையில் மனிதர்கள் அனைவரும் சமம் என்ற உண்மையை நிலைநாட்ட பெரிதும் விரும்பினார். நாயர் குலத்தைச் சேர்ந்த இவர், ஏற்கனவே கிறித்தவ சமயத்தைப் பின்பற்றி வந்த தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த மக்களுடன் உறவாடி வந்தார். இதன் காரணமாக, உயர் வகுப்பைச் சேர்ந்த மற்ற அரச அதிகாரிகள் தேவசகாயத்தை வெறுப்புடன் நோக்கினர். உயர் வகுப்பைச் சேர்ந்த இந்துக்கள் கிறித்தவத்தை தழுவக்கூடாது என்ற அன்றைய திருவாங்கூர் அரச கட்டளையைச் சுட்டிக்காட்டி, அவரை மீண்டும் இந்து மதத்தை ஏற்க வலியுறுத்தினர். அதைப் புறக்கணித்ததால், தேவசகாயம் மதம் மாறிய விவகாரம் மன்னரிடம் சென்றது.

திருவாங்கூர் அரசில் கிறித்தவ மக்களுக்கு பொதுவாக பாதுகாப்பு இருந்தாலும், புதிதாக மதம் மாறுவதற்கு சில தடைகள் இருந்தன. நீலகண்டன் என்கிற தேவசகாயம் உயர் வகுப்பைச் சேர்ந்தவராகவும், அரச அதிகாரியாகவும் இருந்ததால் அவர் கிறித்தவராக மாறியதை மன்னர் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. தமது மனதை மாற்றிக் கொள்ளுமாறு மன்னர் விடுத்த அழைப்பை தேவசகாயம் பிள்ளை முழுமனதோடு நிராகரித்தார்.இதனால் ஆத்திரமடைந்த மன்னர் மார்த்தாண்ட வர்மா, தேவசகாயத்தை சிறையில் அடைக்குமாறு ஆணையிட்டார். இந்த தண்டனை

மூலம், அவரை மனம் மாற்றி கிறித்தவ மதத்தைக் கைவிடச் செய்யலாம் என்பது மன்னரின் நம்பிக்கையாக இருந்தது.

**மரண தண்டனை**

தேவசகாயம் இப்பாறையின்மீது செபித்தபோது, அதன்மீது அவரின் முழங்கால் மற்றும் மற்றும் முழங்கையின் தடையங்கள் பதிந்ததாக நம்பப்படுகின்றது. பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்ட பிறகும் தேவசகாயம், கிறித்தவ நம்பிக்கையில் உறுதியாக இருந்தார். இதனால் நம்பிக்கை இழந்த மன்னர், தேவசகாயத்தின் கீழ்ப்படியாமையை அரசத் துரோகமாக கருதி அவருக்கு மரண தண்டனை விதித்தார். அவரைக் கொல்லும்முன், மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக அமையும்படி அவரை எருமை மாடுமீது அமர்த்தி பல ஊர்களுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லவும் ஆணையிட்டார். இதையடுத்து, அவரது உடல் முழுவதும் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தப்பட்டது. அவரது கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு கழுத்தில் எருக்கம் பூ மாலை அணிவிக்கப்பட்டு எருமை மாட்டின்மீது பின்னோக்கி அமர வைத்து அவரை ஊர்ஊராக அழைத்துச் சென்றார்கள்.

தேவசகாயம் பிள்ளை சென்ற இடங்களில் எல்லாம் அவரிடம் ஆசி பெறச் சென்ற கிறித்தவர்களுக்கு அற்புதங்கள் நிகழ்ந்ததாக கூறப்படுகிறது. அவரைக் கட்டி வைத்திருந்த பட்டுப்போன வேப்பமரம் ஒன்று மீண்டும் தளிர்த்து வளர்ந்ததாகவும் வரலாறு பதிவு செய்கிறது. இதன் காரணமாக, தேவசகாயம் பிள்ளையின் புகழ் மக்களிடையே வேகமாக பரவியது. ஆகவே, அவரை ரகசியமாக கொலை செய்து விடுமாறு மன்னரிடம் இருந்து கட்டளை வந்தது. மக்கள் அனைவரும் பொங்கல் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், 1752 சனவரி 14ந்தேதி குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் உள்ள காற்றாடி மலையில் தேவசகாயம் பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்டார்.

**மறைசாட்சி**

தேவசகாயம் பிள்ளையின் உடலை காட்டிலேயே எரித்து தீ வைத்துவிட்டுச் சென்றனர் மன்னரின் படைவீரர்கள். சில நாட்களுக்கு பிறகு இது குறித்து அறிந்த அப்பகுதி கத்தோலிக்க கிறித்தவர்கள், தேவசகாயம் பிள்ளையின் உடல் பகுதிகளை எடுத்துச் சென்று நாகர்கோவிலில் உள்ள கோட்டாறு புனித சவேரியார் ஆலய வளாகத்தில் அடக்கம் செய்தனர். அவரை மறைசாட்சியாக கருதியதாலேயே, ஆலய வளாகத்தில் அவருக்கு கல்லறை அமைக்கப்பட்டது. அப்பொழுது கொச்சி மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த கிளெமென்சு யோசப், "நமக்கொரு மறைசாட்சி கிடைத்து விட்டார்" என்று கூறி சிறப்பு வழிபாடு நடத்தியதாக குறிப்புகள் உள்ளன.

தேவசகாயம் பிள்ளையின் கல்லறையில் செபித்ததால் பல்வேறு அற்புதங்கள் நிகழ்ந்ததாக குமரி மாவட்ட மக்கள், கத்தோலிக்க திருச்சபை அதிகாரிகளுக்கு தெரிவித்தனர். இதையடுத்து, கிறித்தவ நம்பிக்கையின் பொருட்டே தேவசகாயம் பிள்ளை கொல்லப்பட்டார் என்னும் செய்தி அடங்கிய அறிக்கையை அப்போது கொச்சி ஆயராக இருந்த கிளெமென்சு யோசப் (Clemens Joseph) 1756ல் ரோமில் திருத்தந்தையிடம் கையளித்தார். இலத்தீன்

மொழியில் எழுதப்பட்ட அந்த அறிக்கையும் அதன் ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்புகளும் உள்ளன. அப்பொழுது, மறைசாட்சி கட்டுண்டிருந்த சங்கிலியும் ரோமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிகிறது. இதுவே, அவரை புனிதராக உயர்த்துவதற்கான முதல் முயற்சியாக கருதப்படுகிறது.

அருளாளர் இருநூற்று நாற்பது ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு, 1993ஆம் ஆண்டில் தேவசகாயம் பிள்ளைக்குப் புனிதர் பட்டம் அளிக்க கோட்டாறு மறைமாவட்ட ஆயர் லியோன் தர்மராஜ் 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர் பேரவை, அகில இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையுடன் இணைந்து, தேவசகாயம் பிள்ளைக்குப் புனிதர் பட்டமும் அவர் இறை ஊழியர் எனவும் அறிவிக்கப்பட்டார்.

2012 ஜூன் மாதத்தில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், தேவசகாயம் பிள்ளையை வணக்கத்திற்குரியவர் நிலைக்கு உயர்த்தினார். தேவசகாயம் பிள்ளையின் மறைசாட்சிய (Martyr) வாழ்வின் அடிப்படையில், அவருக்கு அருளாளர் பட்டம் வழங்கவும் ஒப்புதல் வழங்கினார். இதையடுத்து நாகர்கோவில் கார்மேல் மேனிலைப் பள்ளி வளாகத்தில் 2012 திசம்பர் 2ந்தேதி நடைபெற்ற விழாவில், தேவசகாயம் பிள்ளையை அருளாளராக உயர்த்தும் அறிவிப்பை திருத்தந்தையின் பிரதிநிதியான கர்தினால் ஆஞ்செலோ அமாத்தோ வெளியிட்டார்.

**மறைசாட்சி பட்டம் அளிக்கும் விழா**

2012ஆம் ஆண்டு, திசம்பர் மாதம் 2ஆம் நாள், தேவசகாயம் பிள்ளை அடக்கம் செய்யப்பட்டுள்ள கோட்டாறு மறைமாவட்ட சவேரியார் முதன்மைக் கோவிலை அடுத்துள்ள கார்மேல் மேனிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியின்போது தேவசகாயம் பிள்ளை "மறைச்சாட்சி" (Martyr) என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டார். அப்போது அவருக்கு "முத்திப்பேறு பெற்றவர்" (Blessed) என்னும் பட்டமும் அளிக்கப்பட்டது. இச்சிறப்பு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய கர்தினால் ஆஞ்செலோ அமாத்தோ என்பவர் உரோமையிலிருந்து கோட்டாற்றுக்கு வருகை தந்தார். அந்நிகழ்ச்சியில் தமிழகத்திலிருந்தும் இந்தியாவின் பிற நாடுகளிலிருந்தும் பல கத்தோலிக்க தலைவர்கள், இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர். தேவசகாயம் பிள்ளை பக்தி கிறித்தவர் அல்லாதவர் நடுவிலும் நீண்ட காலமாக இருந்து வருவதால் பல சமயத்தினர் சிறப்பு விழாவில் பங்கேற்றனர்.

**புனிதர் பட்டம்**

திருத்தந்தை பிரான்சிசு, அருளாளர் தேவசகாயம் பிள்ளையைப் புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கு ஒப்புதல் தெரிவித்து அதிகாரப் பூர்வமான ஆவணத்தில் 2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ஆம் நாள் கையெழுத்திட்டார். தேவசகாயம் பிள்ளைக்கு 15.05.2022 அன்று புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது..

**தேவசகாயம் பிள்ளையின் கல்லறை புதுப்பிக்கப்படல்**

தேவசகாயம் பிள்ளைக்கு மறைச்சாட்சி பட்டம் அளிக்கும் நிகழ்வை முன்னிட்டு, கோட்டாறு மறைமாவட்ட சவேரியார் முதன்மைக் கோவிலில்

தேவசகாயம் பிள்ளையின் கல்லறை புதுப்பிக்கப்பட்டுள்ளது. 2012, திசம்பர் 2ஆம் நாள் அக்கல்லறையைச் சந்தித்து அங்கு இறைவேண்டல் நிகழ்த்திட ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர். தேவசகாயம் இறந்த இடம் இன்று தேவசகாயம் மவுண்ட் என்றும், ஆரல் குருசடி என்றும் அழைக்கப்படுகிறது.

## புனித பிரான்சிஸ்கு சலேசியார்-வாழ்வும் பாடமும்

*திரு. I. ஜான் சுரேஷ்*

இயல்பிலேயே பொறுமைசாலியான பிரான்சிஸ் சலேசியார் பிரான்ஸ் நாட்டில் 1567 ஆகஸ்ட் 21 அன்று பிறந்தார். பிரான்சிஸ் தே பாய்சி மற்றும் பிரான்சிஸ் தே சியோனாஸ் ஆகியோருக்கு 13 பிள்ளைகளுள் மூத்த மகன் இவர். 13 ஆண்டுகள் தனக்கு குருவாக பணியாற்ற அழைப்பு இருப்பதை யாருக்கும் தெரிவிக்காமல் இருந்தார். போர் வீரனாக வேண்டும் என்று இவரது தந்தை கூறியபோது அதற்கும் மறுப்பேதும் கூறவில்லை. சட்டம் படித்தபோதும் சரி, இறையியல் கற்றபோதும், வாள் சண்டையில் முன்னேறிய போதும் தனது தனிப்பட்ட செப வாழ்வில் வளர்ச்சி கண்டாரேயன்றி தந்தையிடம் ஏதும் கூறவில்லை. ஏனென்றால் தமது விருப்பம் என்பதைவிட எப்போது அழைத்தலை நான் ஏற்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ அப்பொழுதுதான் செல்ல வேண்டும் என்று நினைத்திருந்தார்.

குதிரை ஓட்டுவதில் தேர்ச்சி பெற்றிருந்த பிரான்சிஸ் மூன்று முறை கீழே விழுந்தார். அப்போது தனது வாளும் அது இருந்த உறையும் தரையில் விழுந்தபோது சிலுவை அடையாளமாகவே ஒவ்வொருமுறையும் கிடந்தது. இதை இறைவனின் அடையாளமாக கருதி தந்தையிடம் தனது விருப்பத்தை கூறினார். ஆன்மீகத்தில் இவர் கொண்டிருந்த வளர்ச்சியை கண்ட ஆயர் "இவர் உண்மையிலேயே இறையனுபவம் கொண்டவர்" என்று கூறி குருவாகத் திருநிலைப்படுத்தினார். "குருத்துவ மாண்பே மற்ற உலகப் பதவிகளைவிட மேன்மையானது" என்று பிரான்சிஸ் தெளிந்த பார்வையுடன் பணியைத் தொடங்கினார்.

கால்வின் சபையினர் கிறிஸ்தவர்களைத் தம் வசமாக்கியிருந்த சூழலில் கிறிஸ்தவர்களை மீண்டும் கத்தோலிக்க சபைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தார். ஆனால் அதில் எந்த ஒரு பயனும் ஏற்படவில்லை. ஒரு முன்னேற்றமும் ஏற்படாததால் தமது மறையுரையை தாளில் எழுதி கையாலே பல பிரதிகள் எடுத்து ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் போட்டார். மாற்றம் இல்லை. இவரது முயற்சியால் 40,000 பேர் கத்தோலிக்க மதத்திற்கு திரும்பி வந்தார்கள்.

"மிக மோசமான பாவம் என்பது மற்றவர்களைத் தீர்ப்பிடுவதும், புரணிபேசுவதும்" என்று, பிரான்சிஸ் தினந்தோறும் 50க்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி அதன் வாயிலாக பலரை நெறிப்படுத்தினார். "புனிதம் என்பது துறவு வாழ்வு மேற்கொண்டவர்களுக்குத்தான் என்றிருந்த நிலையை மாற்றி அது சாமானியர்களுக்கும் உரியது" என்பதை தமது "புனித வாழ்விற்கான முன்னுரை" என்னும் நூலில் 1608ல் அழுத்தமாக பதிவு செய்தார்.

"உமது பார்வையை தியானத்தின் வழியாக கடவுள் பக்கம் திருப்பினால் உன் முழு ஆன்மாவிலும் கடவுள் நிறைந்திருப்பார். அனைத்து செயல்பாடுகளையும் கடவுள் பிரசன்னத்திலிருந்தே ஆரம்பி என்று மொழிந்த

பிரான்சிஸ் தனது அருகிலிருந்த அருட்சகோதரியிடம் "தாழ்ச்சி" என்னும் வார்த்தையை கடைசியாக சொல்லிவிட்டு 1622 டிசம்பர் 28 அன்று உயிர் நீத்தார். 08.01.1661ல் அருளாளர் நிலைக்கும், 08.04.1665-ல் அன்று புனித நிலைக்கு திருத்தந்தை ஏழாம் அலெக்சாண்டர் உயர்த்தினார். 1877 நவம்பர் 16 அன்று மறைவல்லுநர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

## திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*

**வறியோர்க்கான இன்னிசைக் கச்சேரி அன்பின் நற்செய்தி - திருத்தந்தை**

வறியோர்களுடனான இன்னிசைக் கச்சேரி ஒருங்கிணைந்த நல்லிணக்கப் பயணத்தின் ஓர் அழகான அடையாளம் என்றும், மிகவும் பலவீனமான சகோதர சகோதரிகளுடன் ஒன்றிணைந்து நடத்தப்படும் இச்செயல் அன்பின் அற்புதமான நற்செய்தி என்றும் கூறினார் திருத்தந்தை. வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில் வறியோர்க்கான இன்னிசைக் கச்சேரியின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கலைஞர்கள் ஏறக்குறைய 240 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 40ஆவது ஆண்டினைச் சிறப்பிக்கும் உரோம் மறைமாவட்ட பாடகர் குழுவினருக்குத் தன் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். வத்திக்கான் தூய ஆறாம் பவுல் அரங்கத்தில் வறியோர்கள் பலர் பங்கேற்க இருக்கும் இந்த இன்னிசைக் கச்சேரியை ஒருங்கிணைத்த அனைவரையும் வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், இன்னிசைக் கச்சேரி என்பது நல்லிணக்கத்தின் அழகான உவமை என்றும், நிறைவாக வாழ முயற்சிக்கும் திருஅவையின் ஒருங்கிணைந்த பயணத்தின் நல்லிணக்கம் என்றும் கூறினார்.

நல்லிணக்கத்தின் உவமையாகிய இன்னிசைக்கச்சேரியைப் பற்றிச் சிந்திக்கும் நேரத்தில் இருத்தலின் தேவையைத் தேர்ந்தெடுப்பது மிக அவசியம் என்றும், தேவையிலிருக்கும் மக்களுக்கான இந்த இன்னிசைக் கச்சேரியில் பங்கேற்பது என்பது நம்பிக்கையின் அடையாளத்தை உருவாக்குகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை. அன்பின் ஊற்றாகிய இயேசுவின் இதயத்திலிருந்து தொடங்கி எதிர்நோக்கின் அடையாளங்களை உருவாக்குவதைத்தான் வரும் யூபிலி ஆண்டு முன்வைக்கின்றது என்று கூறிய திருத்தந்தை அவர்கள், அனைவரின் ஒத்துழைப்பை உணராமல் சிம்பொனி எனப்படும் கூட்டிசையை உருவாக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்

**அரசுத்தூதர்கள் நேர்மறையான நடுநிலையில் செயல்படவேண்டும்**

துணிவு, படைப்பாற்றல், அறிவாற்றல் கொண்டு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செய்யப்படும் அரசுத்தூதர்களின் செயல்கள், போரினால் களைப்படைந்த உலகிற்கு எதிர்நோக்கின் விதைகளை விதைக்க உதவுகின்றன. துன்பங்கள், துயரங்கள், தோல்விகள், போர்கள், மோதல்கள் போன்றவைகள் இருந்தாலும் உரையாடல், நல்லிணக்கம், பரஸ்பர புரிதல், ஒவ்வொரு நபரின் மாண்பு, மற்றும் உரிமைகளுக்கு மதிப்பளித்து, அமைதியை தேடும் கடமையை பன்னாட்டு சமூகம் கைவிட முடியாது என்றும்,

பொதுநலனுக்கான பணியில் உரையாடலை ஊக்குவிக்க நேர்மறையான நடுநிலையில் அரசுத்தூதர்கள் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் இந்தியா, ஜோர்தான், டென்மார்க், இலக்ஸம்பர்க், சாவோ டோம் மற்றும் பிரின்சிபே, ருவாண்டா, துர்க்மெனிஸ்தான், அல்ஜேரியா, பங்களாதேஷ், ஜிம்பாப்வே, கென்யா ஆகிய நாடுகளின் அரசுத்தூதர்களைச் சந்தித்தபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். பன்னாட்டு சமுதாயத்தின் மீதுள்ள அக்கறை மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள சவால்களை எதிர்கொள்ளுதல், விரிவான மற்றும் நீண்ட காலத் தீர்வுகளை உருவாக்குதல் போன்றவற்றிற்கு ஒவ்வொரு நாடும் குரல் கொடுக்க வேண்டும் என்றும், அரசின் செயலாண்மைத்திறம் கொண்ட பொறுமையான பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

புதிய ஆண்டிற்காகக் காத்திருக்கும் நாம், நாளை என்ன நடக்கும் என்ற ஆசையோடும் எதிர்பார்ப்போடும் புதிய ஆண்டை எதிர்நோக்குடன் காண அழைக்கப்படுகின்றோம் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், 2025ஆம் ஆண்டு யூபிலி வலியுறுத்துவது போல எதிர்நோக்குடன் வாழவும் வலியுறுத்தினார். ஆக்கப்பூர்வமான நட்புறவு, ஒத்துழைப்பு, அமைதிப் பணியில் உரையாடல் ஆகியவற்றின் பிணைப்புகளை மேம்படுத்துவதில் அரசுத் தூதர்கள் துணிவுடன் தொடர்ந்து பணியாற்ற அவர்களை ஊக்கப்படுத்திய திருத்தந்தை அவர்கள், துணிவு, படைப்பாற்றல், அறிவாற்றல் கொண்டு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செய்யப்படும் அரசுத்தூதர்களின் செயல்கள் போரினால் களைப்படைந்த உலகிற்கு எதிர்நோக்கின் விதைகளை விதைக்க உதவுகின்றன என்றும் கூறினார் திருத்தந்தை.

### திருத்தந்தையைச் சந்தித்த கர்தினால் Augusto Paolo Lojudice

அவசரகால உதவி தேவைப்படும் நிலையில் இருக்கும் தொழிலாளர்களின் பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய கடந்த ஒரு வாரமாக முயற்சித்து வருகின்றோம் - கர்தினால் Paolo Lojudice சியன்னா, கோல்லே வால் திஎல்சா, மோன்தல்சினோ மறைமாவட்ட ஆயரான கர்தினால் யுரபரளவழ Paolo Lojudice அவர்கள் வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்து ஐரோப்பாவில் முன்னணி வீட்டு உபகரணங்கள் வழங்குனராக இருக்கும் பெக்கோ ஐரோப்பா நிறுவனத்தின் தொழிலாளர்கள் பிரச்சனைகள் குறித்து பகிர்ந்து கொண்டார். யுளஉழடீைநஜெ மறைமாவட்ட ஆயர் மற்றும் Tronto-வின் San Benedetto உயர்மறைமாவட்ட ஆயர்களுடன் திருத்தந்தையைச் சந்தித்த கர்தினால் Paolo Lojudice அவர்கள், தங்கள் பகுதியில் நிலவும் பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ள திருத்தந்தை வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறுவதாகவும், நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பின்றி துன்புறுவதாகவும் வத்திக்கான் செய்திகளுக்கு எடுத்துரைத்தார்.

அவசரகால உதவி தேவைப்படும் நிலையில் இருக்கும் தொழிலாளர்களின் பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய கடந்த ஒரு வாரமாக முயற்சித்து வருவதாகவும், வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும்

குடும்பங்களுடன் உறுதியான வகையில் தங்களது உடனிருப்பை வெளிப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார் கர்தினால் Paolo Lojudice. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொழிலாளர் பிரச்சனைகளுக்குத் தனது ஆதரவையும் உடனிருப்பையும் வழங்கி ஊக்கப்படுத்தியதாகவும், வெளிநோக்கிச் செல்லும் திருஅவையாகக் குறிப்பாக துயரத்தில் இருக்கும் மக்களுக்கும், சமூக, பொருளாதார மற்றும் பலவீனமான நிலையில் உள்ளவர்களுக்கும் உதவும் திருஅவையாக இருக்கக் கேட்டுக் கொண்டதாகவும் எடுத்துரைத்தார் கர்தினால் Paolo Lojudice.

**ஏழ்மை என்பது கடவுளை முழுவதுமாக சார்ந்திருப்பது!**

தூய ஆவியால் தூண்டப்பட்ட கடவுளை நோக்கிய ஒரு பயணத்தில், "மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறிய நம் மீட்பராகிய கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக மாறுகிறோம் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். சாசியாவில் உள்ள தூய ஆவியாரின் Canoness துறவு சபையினர் மற்றும் அதனின் தனிவரத்துடன் இணைக்கப்பட்ட மோண்ட்பெல்லியரின் அருளாளர் குய்தோவினுடைய குழுமத்தினரைத் திருப்பீடத்தில் சந்தித்தபோது இவ்வாறு உரைத்த திருத்தந்தை, நாம் நம்மைச் சிறியவர்களாகவும், அனைவருக்கும் பணியாளர்களாகவும் மாற்றிக்கொள்ள முடிந்தால் (காண்க. மத் 23.10-11), ஏழைகளை வரவேற்று, அவர்களுக்கு நமது தொண்டு செய்யும் வாய்ப்பை வழங்குவோம் என்றும் தெரிவித்தார்.

"ஏழைகளின் பராமரிப்பு மற்றும் சேவையில் முதன்மையாகத் தன்னை அர்ப்பணிக்க" என்ற அருளாளர் குய்தோவினுடைய விருதுவாக்கை அவர்களுக்கு நினைவுபடுத்திய திருத்தந்தை, இதனடிப்படையில் ஒன்றிப்பு, ஏழ்மை மற்றும் சேவை குறித்த மூன்று பண்புகளை அவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவதாகக் கூறினார். உங்கள் சபையின் அமைப்பு விதி (Rule) ஏழ்மை என்பது, தனக்கென்று எதுவும் இல்லாமல் வாழ்வது என்பதை வெளிப்படுத்துகிறது என்று எடுத்துக்காட்டிய திருத்தந்தை, ஒன்றுமே இல்லாமல் நாம் வாழவேண்டும் என்பதை இது அர்த்தப்படுத்தவில்லை, மாறாக, நாம் இந்த சபையில் வெறும் விருந்தாளிகள் என்பதையும் நம்மிடம் இருப்பதை ஏழைகளுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது என்றும் அவர்களுக்கு விளக்கினார். இந்த வழியில், சகோதரத்துவ வாழ்க்கை இடைவெளிகள், பணிகள் மற்றும் சேவைகளைப் பகிர்வதற்கு அப்பால் செல்கிறது என்றும், ஏழ்மை என்பது நமக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாமல் நம்மையே முழுதுமாகக் கடவுளுக்கு கொடையாகக் கொடுப்பதாகும் என்றும் விவரித்தார் திருத்தந்தை.

**உலகிற்குத் தேவைப்படும் ஞானத்தின் ஆசிரியர்களாக இருங்கள்!**

நீங்கள் குடிமை மனப்பான்மை மற்றும் பிறரன்புப் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டு மட்டுமல்ல, அனைவருக்கும் புரியும் மொழியான தொண்டு என்பதன் வழியாக, நற்செய்தி அறிவிப்பின் கருவிகளாகவும் மாறுகிறீர்கள் : திருத்தந்தை பிரான்சிஸ். ஒரு குறிக்கோள், சந்தேகத்திற்கு இடமின்றி

உயர்ந்தது, இது சமூக மற்றும் தொண்டு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான ஒவ்வொருவரின் கைவினைத்திறன் வழியாக அடையப்படுகிறது, இது மனித மற்றும் ஆன்மிக உருவாக்கத்தில் இருந்து தொடங்குகிறது, இது திருஅவையின் சமூகக் கோட்பாட்டின் ஒளியில் எப்போதும் மாறிவரும் சமூகப் பிரச்சனைகளை உறுதியாக சமாளிக்க உதவுகிறது என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். ஸ்பெயினின் டோலேதோவிலுள்ள காரித்தாஸ் அமைப்பின் தூதுக்குழுவைத் அதன் 60-ஆம் ஆண்டு பணிநிறைவையொட்டி திருப்பீடத்தில் சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை, தொடர்ந்து அர்ப்பணம் நிறைந்த மனதுடன் பணியாற்றுமாறு அவர்களை உற்சாகப்படுத்தினார்.

ஒரு தனிநபருக்குச் செய்யக்கூடிய உறுதியான நன்மைகளைத் தாண்டி, தொண்டு மற்றும் நீதியின் உணர்வைப் பரப்புவதன் வழியாக சமூகத்தில் மாற்றத்திற்கான ஓர் இயந்திரமாக இருக்க வேண்டும் என்ற சவாலை ஏற்றுக்கொண்டு, அனைவரிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது என்றும், நல்லவர்கள் அதிக சகோதர மனசாட்சியுடன் இருப்பார்கள் என்றும், அவர்களுக்கு எடுத்துக்காட்டினார் திருத்தந்தை. இவ்வாறு செய்வதன் வழியாக, நீங்கள் குடிமை மனப்பான்மை மற்றும் பிறரன்புப் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டு மட்டுமல்ல, அனைவருக்கும் புரியும் மொழியான தொண்டு என்பதன் வழியாக, நற்செய்தி அறிவிப்பின் கருவிகளாகவும் மாறுகிறீர்கள் என்றும் அவர்களுக்கு எடுத்துரைத்தார் திருத்தந்தை. கிறிஸ்துவிடமிருந்து, அவருடைய வார்த்தையைப் படிப்பதிலிருந்து, அருளடையாளங்களின் அனுபவத்திலிருந்து, அவருடைய மேய்ப்பர்களின் குரலைக் கவனமாகக் கேட்டு, அவருடைய நற்கருணை மற்றும் நீங்கள் பணியாற்றும் மக்களின் பிரசன்னத்திலிருந்து எப்போதும் கற்றுக்கொண்டு, இந்த முயற்சியில் முன்னேற உங்களை ஊக்குவிக்கிறேன் என்றும் உரைத்தார்.

**வாழ்வின் பொன்னான நேரங்களைக் கணக்கிடுவதற்கான காலம் யூபிலி**

யூபிலிகள் என்பது தனி மனிதர்களாகவும் சமூகமாகவும் நாம் நமது வாழ்க்கையின் பொன்னான நேரங்களைக் கணக்கிடுவதற்கான காலம் என்றும், தூய ஆவியாரின் குரலுக்கு செவிமடுத்து வாழ்வதற்கான அழைப்பின் காலம் என்றும் டுவிட்டர் குறுஞ்செய்தி ஒன்றில் பதிவிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். டிசம்பர் 23 திங்கள் கிழமை ஹேஸ்டாக் யூபிலி ஆண்டு 2025 என்ற தலைப்பில் இவ்வாறு தனது கருத்துக்களைப் பதிவிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கேட்கச்செவி உடையோர் திருஅவைகளுக்குத் தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும் என்ற திருவெளிப்பாடு நூலின் இறைவார்த்தைகளையும் நினைவுகூர்ந்துள்ளார். தனிப்பட்ட நபர்கள் மற்றும் சமூகங்களாக நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வின் மிகச்சிறப்பான பொன்னான நேரங்களைக் கணக்கிடுவதற்கான சிறந்த நேரம் யூபிலிகள் என்றும், இக்காலகட்டத்தில் தூய ஆவியார் நமக்கு என்ன எடுத்துரைக்கின்றார் என்பதைப் பற்றி சிந்திக்கவும் நினைவுகூரவும் செவிசாய்க்கவும் அழைப்புவிடுக்கும் காலம் என்றும் என்றும் அச்செய்தியில் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை

# சுடர் வாசகர் போட்டி - 117 சரியான விடைகள்

1. பொது நலனைக் கட்டி எழுப்புவதில்
2. குருத்துவ அருட்பொழிவு பெறவிருக்கும் மாணவர்களுக்கு
3. பேராயர் கர்தினார், ரினால்டியிடம்
4. புனித ஸ்தேவான்
5. நவம்பர் 13, 1938.
6. புனித சிலுவை ஜான்
7. 1922
8. பான் ஜேசு பசிலிகா
9. அமைதியைக் கட்டியெழுப்புவதாகும்
10. நவம்பர் 9
11. மோசே
12. புனித ஸ்தேவான்
13. புனித பிரான்சிஸ் சவேரியார் கப்ரீனி

14 பெர்னதெத்திடம், 16வது காட்சியில்

15. ஸ்பெயின் நாட்டுக்கு

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Santhosa Mary, Coimbatore

Mr. Lourdusamy, Bangalore

Ms. Edwin Mary, Villupuram

# சுடர் வாசகர் போட்டி - 118

1. "பாவத்தின் சம்பளம் மரணம்" விவிலியத்தில் எங்குள்ளது?
2. புனித தேவசகாயம் பிள்ளை மனம்மாற உறுதுணையாய் இருந்த வெள்ளையர் யார்?
3. "திருச்சபையின் மறைவல்லுநர்" என்று போற்றப்பட்டவர் யார்?
4. "ஒருவரும் பாவியாக மரிக்கக் கூடாது" என்ற எண்ணம் கொண்ட புனிதை யார்?
5. கமாலியேல் யார்?
6. தாய் மனம்மாறிய மகிழ்ச்சியோடு உயிர் நீத்த புனிதை யார்?
7. அரு. அலோசியஸ் வரியராவிற்கு அருளாளர் பட்டம் எப்போது? யார் வழங்கியது?
8. "உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" கூறியது யார்?
9. மறையுரையை கையில் எழுதி வீடுகளுக்குள் போட்ட புனிதர் யார்?
10. புனித தேவசகாயம் பிள்ளையின் இயற்பெயர் என்ன?
11. கத்தோலிக்க கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களின் பாதுகாவலர் யார்?
12. "என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்" கூறியது யார்?
13. "பத்திரிக்கையாளரின் புரவலர்" என்ற பட்டம் பெற்ற புனிதர் யார்?
14. புனித செபஸ்தியாரை தன் வீட்டில் வைத்து காப்பாற்றிய சகோதரி யார்?
15. அரு. அலோசியஸ் வரியராவின் பெற்றோரின் பெயர் என்ன?

**அன்பு வாசகர்களே!**

200/-

**தீபகம்**

## அடுத்த சுடரில்

## பகுதி 1 : வழிபாட்டு வழிக்காட்டி

ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா
புனித ஜான் தெ பிரிப்டோ (அருளானந்தர்)
புனித கொன்சாலோ கார்சியா
புனித ஜெரோம் எமிலியானி, மற்றும் ஜோசபின் பக்கீத்தா
பொதுக்காலம் 5ம் ஞாயிறு
லூர்து நகர் புனித அன்னை மரியா
பொதுக்காலம் 6ம் ஞாயிறு
புனித கன்னிமரியாவின் ஊழியர் எழுவர்
புனித குரியாகோஸ் எலியாஸ் சாவரா
புனிதர்கள் பிரான்சிஸ்கோ ஜெசிந்தா மார்டோ
புனித பீட்டர் தமியான்
திருத்தூதர் புனித பேதுருவின் தலைமைப் பீடம்
பொதுக்காலம் 7ம் ஞாயிறு
புனித லூயிஜி வெர்சிலியா மற்றும் புனித கலிஸ்துஸ் கரவாரியோ

## பகுதி 2 : நம்பிக்கையில் வளர ...

அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் வாழ்வு தரும் பாடம்
புனித லூர்தன்னை தரும் செய்திகள்
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறைந்த வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி"பதில்களை ஜனவரி 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஜனவரி மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | பு | **அன்னை மரியாள் இறைவனின் தாய்** | **I.** எண். 6: 22-27<br>**II.** கலா. 4: 4-7 | லூக். 2: 16-21 |
| 2 | வி | புனிதர்கள் பெரிய பேசில் நசியான்சு | 1யோவா 2: 22-28 | யோவா. 1: 19-28 |
| 3 | வெ | இயேசுவின் தூய்மைமிகுப் பெயர் | 1யோவா. 2: 29-3:6 | யோவா. 1: 29-34 |
| 4 | ச | புனித எலிசபெத் ஆன்சேட்டன் | 1யோவா. 3: 7-10 | யோவா. 1: 35-42 |
| 5 | **ஞா** | **ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா** | **I.** எசா. 60: 1-6<br>**II.** எபே. 3: 2-3, 5-6 | மத். 2: 1-12 |
| 6 | தி | புனித ஆன்றி பெசட் | 1யோவா. 3: 22-4: 6 | மத். 4:12-17, 23-25 |
| 7 | செ | புனித பென்யபோர்ட் ரெய்மண்ட் | 1யோவா. 4: 7-10 | மாற்கு 6: 34-44 |
| 8 | பு | புனித செவரினாஸ் | 1யோவா. 4: 11-18 | மாற்கு 6: 45-52 |
| 9 | வி | கண்டர்பரி நகர் புனித அட்ரியன் | 1யோவா. 4: 19-5:4 | லூக். 4: 14-22 |
| 10 | வெ | புனித ஆகாதோ தமதுர்குஸ் | 1யோவா. 5: 5-13 | லூக். 5: 12-16 |
| 11 | ச | புனித தியோடோசியுஸ் செனபியார்க் | 1யோவா. 5: 14-21 | யோவா. 3: 22-30 |
| 12 | **ஞா** | **ஆண்டவரின் திருமுழுக்கு விழா** | **I.** எசா. 40: 1-5, 9-11<br>**II.** தீத்து 2: 11-14, 3: 4-7 | லூக். 3: 15-16, 21-22 |
| 13 | தி | புனித ஹிலாரி ஆயர் | எபி. 1: 1-6 | மாற்கு 1: 14-20 |
| 14 | செ | புனித தேவசகாயம் மறைச்சாட்சி | எபி. 2: 5-12 | மாற்கு 1: 21-28 |
| 15 | பு | **புனித வனத்துச் சின்னப்பர்** | எபி. 2: 14-18 | மாற்கு 1: 29-39 |
| 16 | வி | புனித ஜோசப் வாஸ் | எபி. 3: 7-14 | மாற்கு 1: 40-45 |
| 17 | வெ | புனித அந்தோணியார் துறவு மடத்துத் துறவி | எபி. 4: 1-5,11 | மாற்கு 2: 1-12 |
| 18 | ச | ஹங்கேரி நாட்டு புனித மார்கரெட் | எபி. 4: 12-16 | மாற்கு 2: 13-17 |
| 19 | **ஞா** | **பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு** | **I.** எசா. 62: 1-5<br>**II.** 1கொரி. 12: 4-11 | யோவா. 2: 1-12 |
| 20 | தி | புனித பபியான் திருத்தந்தை, புனித செபஸ்தியார் | எபி. 5: 1-10 | மாற்கு 2: 18-22 |
| 21 | செ | புனித ஆக்னெஸ் | எபி. 6:10-20 | மாற்கு 2: 23-28 |
| 22 | பு | புனித வின்சென்ட் திருத்தொண்டர் | எபி. 7: 1-3, 15-17 | மாற்கு 3: 1-6 |
| 23 | வி | புனித எமரன்டியனா | எபி. 7: 25-8:6 | மாற்கு 3: 7-12 |
| 24 | வெ | சலேசு நகர்ப் புனித பிரான்சிஸ் | எபி. 8: 6-13 | மாற்கு 3: 13-19 |
| 25 | ச | திருத்தூதர் புனித பவுலின் மனமாற்றம் | திப. 22: 3-16 | மாற்கு 16: 15-16 |
| 26 | **ஞா** | **இந்திய குடியரசு நாள், பொதுக்காலம் 3ம் ஞாயிறு** | **I.** நெகே. 8: 2-4, 5-6, 8-10<br>**II.** 1கொரி. 12: 12-30 | லூக். 1: 1-4, 4:14-21 |
| 27 | தி | புனிதர்கள் திமொத்தேயு, தீத்து மற்றும் புனித ஆஞ்சலா மெர்சி | எபி. 9: 15, 24-28 | மாற்கு 3: 22-30 |
| 28 | செ | அக்குயினோ நகர் பனித தாமஸ் | எபி. 10: 1-10 | மாற்கு 3: 31-35 |
| 29 | **பு** | **புனித கான்ஸ்டான்டினுஸ்** | எபி. 10: 11-18 | மாற்கு 4: 1-20 |
| 30 | வி | புனித பதில்தி | எபி. 10: 19-25 | மாற்கு 4: 21-25 |
| 31 | வெ | புனித ஜான்போஸ்கோ | எபி. 10: 32-39 | மாற்கு 4: 26-34 |

# “சங்க ஏடுகள்”

பற்றிய

## வினா விடைப் போட்டி

**இனியவர்களே....**

நம் பங்குகளில் உள்ள ஒவ்வொரு நபரும் திருத்தந்தையின் **‘எதிர்நோக்கின் திருப்பயணம்”** என்ற அறிவுறுத்தலின் பேரில் திருஅவை கொடுத்த **“சங்க ஏடுகள்”** பற்றி அறிந்து கொள்ளவும், அதன் முக்கியத்துவத்தை வாழ்வில் உணரவும் தீபகம் – தொன் போஸ்கோ மறைப்பணி மையம் **“சங்கத்தின் புதிய பார்வை”** என்ற தலைப்பில் சென்னை சலேசிய மாநிலத்தில் உள்ள அனைத்து பங்குகளுக்கிடையேயான “சங்க ஏடுகள்” பற்றிய **வினா விடைப் போட்டி** நடத்த திட்டமிட்டுள்ளோம். தங்கள் பங்குகளில் உள்ள அனைத்து தரப்பினரும் இவ்வினா விடைப் போட்டியில் கலந்துக் கொண்டு பயன்பெற ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள*

**தீபகம்** +91 9385201453

---

*மாபெரும்*

# விவிலியக் கண்காட்சி

*விவிலியம் அறிவோம்! இயேசுவை அறிவோம் !!*





பங்கு மக்களும், மாணவ மாணவியரும் திருவிவிலியத்தைப் பற்றி எளிதாக அறிந்துக் கொள்ள விவிலிய நிகழ்ச்சிகளை படங்களாகவும், செய்திகளாகவும், விளையாட்டுகளாகவும், வீடியோ காட்சிகள், பொம்மலாட்டம் வழியாகவும், எடுத்தியம்பும் சிறந்த கண்காட்சி.

இந்த கண்காட்சியை பங்குகளிலும், பள்ளிகளிலும் அமைத்து விவிலிய அறிவையும் விசுவாசத்தையும் வளர்க்க உதவிடுவோம்.

*மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

+91 9385201453 Deepagam Don Bosco




TO SHARE THE LIGHT

தீபகச் சுடர் வாசகர்கள், உபகாரிகள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும்

**இனிய புத்தாண்டு** மற்றும் **மாபெரும் யூபிலி 2025**

நல்வாழ்த்துக்கள்

தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10